ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ. 3—0
6-மாத சந்தா ,,	—	,, 1-12
வேண் நாட்டிற்கு ,,	—	,, 5—0

ஞாயிற்றுக்கிழமை வெளிவருவது.

விளம்பரதாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தியரு பங்குனிமீ 8உ (20—3—1932) | மலர் 47

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.



நீங்கள் என்றும் எதிர்பார்த்த ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் சுணை முள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவா யிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார் வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின் மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொத்தை வல்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித வல்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பரிமந்தம், நெஞ்சில் காரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், தீர்க்க சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கில் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சிராப்பள்ளி

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.



தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அட்படியானல் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

Read,
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

ஜோதி முத்து.

டாக்டர், B. A. எதிராஜுலுல், தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட கோஷாயி மேக எண்ணை (கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப் பெற்றது.)

வெட்ட வாய்வு, (அஷ்ட்ட) எட்டு விதங்களாக கர்ப்பஸ்தான ஸ்தானங்களில் தங்கி, சந்ததியார்களுக்கு ஜெனித்த தடிப்பு, கிட்டைகள் முதலிய மேகம் 21ச்சும் இரண குஷ்டம் 18ம் 3நோம் ஈம் கோஷாயி மேக எண்ணை சாபபிட்ட 7-வது நாளே எல்லா உபத்திரவங்களிலிருந்து விலகி, 15-வது நாள் பாலிய தேச சடன் விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்று வருவது பிரத்தியட்சம்.

3. நோம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1-க்கு ரூ. 7—0—0 பத்திய விபரம், மருந்து சடன், பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பி வைக்கவும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாகவருகின்றது.

ஆண்டுசேந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'
வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது.
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"போர் முரசு"
வாரப் பதிப்பு.
ஆசிரியர், ச. ம சி. பரமசிவம்.
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா. ரூ. 1—8—0
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஷ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"செவிடு".

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கமத் எண்ணையே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons,
Pilibhit R. K. Ry., U. P.

புதுவைமுரசு

ஆசிரியர்-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகியமுறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்சந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
"பதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

குடி அரசு

எதிர்பாருங்கள்.

பற்பல தேசத்தார்களும் புகழ்ந்து பேசுகிற மதுரை ஆர். எஸ். பதி அன்கோ அவர்களுடைய உலகப்பிரசித்தி பெற்ற "கெய்ரோடைன்" டானிக் மருந்தைப்பற்றி 'குடி அரசு' பத்திரிகையில் பல தடவைகளிலும் விளம்பரம் செய்திருந்தோம். குடி அரசு பத்திரிகையை வாசிக்கிற பெரியோர் பலர் மேற்கண்ட டானிக் மருந்தைப்பற்றி நற்சாட்சிகளிருந்தால் வெளியிடும்படி கேட்டார்கள். அதற்காகக் "கெய்ரோடைன்" டானிக்கைப்பற்றி 18 நாளைக்குள் வந்த நற்சாட்சிக் கடிதங்களை அடுத்த வாரம் 'குடி அரசில்' எத்தனை பக்கத்திற்கு இடந்தாமுடியுமோ அத்தனை பக்கமும் நற்சாட்சிகள் வெளியிடும்படி எழுதியிருக்கிறோம். அன்பர்கள் தயவு செய்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆர். எஸ். பதி அன்கோ (Regd.)

மதுரை.

ஊருக்கு உபதேசம் என்?

(ஸ்க்குரூஉ லூஸ்)

நண்பர்களே! சகோதரர்களே! தோழர்களே! உங்கள்வந்தனம் எனக்கு உரியதாகட்டும். அதன் பிறகு நானும் வந்தனம்செய்கிறேன். பாருங்கள்! உலக அதிசயத்தை நீங்கள் பார்த்துக்கொண்டு தானிருக்கிறீர்கள்! ஆனால் நானும் சிலசொல்லுகிறேன்! கேளுங்கள் தயவுசெய்து இதையும்.

காலம் தலைகீழாக மாறுகிறதுஎன்றுசொல்லுகிறார்கள். இதன்கருத்து என்ன? மக்களின் செய்கை மாறிக் கொண்வருகிறது என்பது தானே. மேலே இருந்தவன் கீழேவருகிறான். கீழேஇருந்தவன் மேலேபோகிறான். அரசனுயிருந்தவன் ஆண்டியாகிறான். ஆண்டி அரசனுகிறான். கூலிவேலை செய்தவன் முதல்மந்திரியாகிறான். முதல்மந்திரி கூலிக்காரனுகிறான்; தர்ப்பைபிடித்தவன் பேனுபிடிக்கிறான்; உத்தியோகம் பண்ணுகிறான். கப்பலேறிச் சென்று பணம்சம்பாதிக்க உரிமை பெற்றவன் பிறந்த இடத்திலேயே கிடந்துவாடுகிறான். உண்ணஉணவும், உடுத்தத்துணியும், இருக்கஇடமும் இல்லாமல் புழுங்குகிறான். பிசசை வாங்குபவன், பிச்சைவாங்குதல் தாங்கள்பிறப்புரிமையெனக்கொண்டவன்- கப்பலேறிதாகடக்கிறான்; உத்தியோக தோரணையில்கப்பலேறுகிறான்; சொந்ததோரணையில் கப்பலேறுகிறான்; வியாபாரதோரணையிலும்கப்பலேறுகிறான். ராஜவிசுவாசியாக இருக்கின்றவன் தீடீரென்று புரட்சிக்காரனுகின்றான்; புரட்சிக்காரனுக இருக்கின்றவன் திடீரென்று ராஜுவத்தலைவனுகின்றான். இம்மாதிரி முன்னிருந்தமுறையிலிருந்து மாறிமக்கள் தங்கள் விருப்பப்படி நடப்பதைத்தான் காலமாறுபாடு என்று சொல்லுவது. அல்லதுகாலம் தலைகீழாகப்போய் விட்டதுஎன்று சொல்லுவது. இந்தமாறுபாட்டை நாம் குதூகலத்துடன்வரவேற்கிறோம். ராஜாமாலே குடி, வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுத்து வரவேற்கிறோம். கைகொட்டிஆரவாரம் செய்து வரவேற்கிறோம். இதைநாம் வைதீகர்களைப்போலவெறுக்கவில்லை; அல்லது இதைக்கண்டு பயப்படவில்லை. "கக்கூஸ்அள்ளுகின்றவன் பரம்பரையாக அந்தவேலையேசெய்ய வேண்டும்" என்ற கொடுமையான முறை ஒழியவேண்டும். "கவலையின்றி மோட்டாரில் எறித்திரிகின்றவன் பரம்பரையாகத்திரியவேண்டும்" என்றவழக்கம் ஒழியவேண்டும். "ஆளுகின்றவனுக்குப்பிறந்தவனெல்லாம் ஆளுகின்றவனுகவே இருக்கவேண்டும்" என்பதும் "அடிமைவேலை செய்கிறவனுக்குப்பிறந்தவனெல்லாம் அடிமைவேலையேசெய்யவேண்டும்" என்பதும், பரம்பரை முட்டாள் தனம்; பகுத்தறிவற்ற தன்மை; மனித சக்தியின் மேன்மையும், அறிவின் திறமையையும் ஆராய்ந்து பாராத புத்தியாகும். எவனுகும் எதையும் செய்யஉரிமை வேண்டும். இதுதான் நமதுநோக்கம்

இது வர்ணச்சிரமத்துக்கு நெருப்பு வைப்பதாகும். ஆகையால் இந்தநோக்கத்தை வர்ணச்சிரம தருமிகள் வெறுப்பார்கள்! கேட்டால் காதுகொடுப்பொத்திக் கொள்ளுவார்கள்! என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது இந்தநிலைவந்துவிட்டது. இனி நில்லாது. எவ்வளவு அணைபோட்டாலும் தடுக்கமுடியாது. இன்று கண்கூடாகப்பாருங்கள்! உண்மை தெரிந்து கொள்ளலாம். நமது நாட்டில் பார்ப்பனன் மிகஉயர்வாகப் "பிரம்மா" வினுலேயேபடைக்கப்பட்டான் என்பது பார்ப்பனர்கள் சாஸ்திரம். அவர்கள் இன்று எப்படி இருக்கிறார்கள். ஒருகாலத்தில்பார்ப்பனனைக்கண்டு மரியாதை செய்யாதவர்கள்யாருமில்லை. பார்ப்பனன் பிச்சைவாங்குகிற வழியிருந்தாலும், அவனைக்கண்டு விட்டால் உடனே எழுந்து மரியாதை செய்யவேண்டும். பார்ப்பானைக்கண்டு எழுந்துமரியாதை பண்ணுத சூத்திரனுடைய "பிருஷ்ட" பாகத்தை அறுக்கவேண்டு மென்று மநுநீதி சொல்லுகின்றது. எல்லாரும் "சுவாமி"- என்றுஅவனை அழைத்தார்கள். இன்று சிலஅறிவிலிகள் அல்லது பழக்கத்தைமாற்றிக்கொள்ள முடியாதவர்கள், அல்லது பார்ப்பனர்களுடைய தயவால் வயிறுவளர்க்க வேண்டுமென்று இருக்கிறவர்கள்தான் அவனைச் "சுவாமி" என்று அழைக்கிறார்களே ஒழிய வேறுயாரும் அவ்வாறு அழைப்பதில்லை. சிறு குழந்தைகள் முதல் ஆண் பெண் அடங்கலும் "பார்ப்பான்" என்றுதான் அவனைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

பார்ப்பானுக்கு இருந்த மதிப்பெல்லாம் மதத்தினுலேயே யாகும். மதம் ஆட்டங்கண்டு கிடு கிடு என்று நடுங்குகின்றபோது அதைப்பிடித்துத்தொங்கிக்கொண்டிருந்த வர்களெல்லாம் கீழே விழவேண்டியது தானே. எவ்வளவு நாளைக்குக்கஷ்டத்தோடு அதைப் பிடித்துத்தொங்கிக் கொண்டிருக்க முடியும். முதலில்மதக்கட்டளைகளை மீறி நடந்தவன் பார்ப்பான்தான். அதற்குச் சந்தேகமேயில்லை. பார்ப்பான் எப்படியும் புத்திசாலி. அதில்சந்தேகமேயில்லை. என்னை நீங்கள் கோபித்துக்கொண்டாலும் கொள்ளுங்கள். ஒருகாலத்தில் "ஒத்தக்காசுச் செட்டியார்" என்ற கௌரவப்பட்டத்துடன், ஒரு கனவான் பத்திரிக்கைகளில் விளங்கினர். அவர் சொன்ன மொழிகளில் ஒன்று நமது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது பார்ப்பனர்கள் தான் புத்திசாலிகள், பார்ப்பனரல்லாதார்க்கு மூளையில்லை" என்ற வார்த்தை சொன்னர். அப்பொழுது பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படும் பத்திரிகைகளெல்லாம் அவரைச் சும்மாவிடவில்லை. போட்டு வெளுத்து வாங்கிவிட்டன. அந்தமாதிரி நம்மைச் செய்தாலும் செய்யுங்கள், நாம் பயப்படமாட்டோம். அந்த ஒத்தக்காசு கனவான் கூறியது பலவகையில் உண்மை யென்றுதான் இச்சமயம் நாம் நினைக்கிறோம்.

ஏனென்றால் பார்ப்பனர்கள் எந்தக்காரியத்தைச் செய்தாலும் அதற்குச் சமாதானம் கூறிவிடுவார்கள். பார்ப்பனரல்லாதார் அதை நம்பிவிடுவார்கள். இந்தத்திறமையால்தான், நமது நாட்டு அரசியல்களை யெல்லாம், அவர்கள் ஆக்கினர்கள், அழித்தார்கள். வெள்ளைக்கார ராஜ்யத்திலும் முதலில் பார்ப்பனர்களே, ஆங்கிலம் படித்துப் பெரிய உத்தியோகங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். காபி அரசன் நமது நாட்டில் குடியேறிய காலத்தில், தாங்களே காபிக்கிளப் எஜமானர்களாகிப் பணந்திரட்டினர்கள்; இன்றும் திரட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இப்படி யிருந்தும் அவர்கள் நிலைக்கு அதாவது கௌரவத்திற்குக்குறைவு வரவில்லை. மதத்தினால் அவர்கள் பெருமை நின்றுகொண்டுதான் இருந்தது. இந்த மதசெல்வாக்கை வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தில் எல்லா உதத்தியோகப் பதவிகளையும் அவர்களே கைப்பற்றினர்கள்.

நல்லவேளையாக இச்சமயத்தில், அதாவது சுமார் 14 வருஷங்களுக்கு முன், டாக்டர் நாயரும், சர். தியாகராயரும்சேர்ந்து பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இதிலிருந்து உத்தியோக வேட்டை கொஞ்சம் குறைந்தது. பார்ப்பனர்களுடைய உத்தியோகச் சொத்தில் பார்ப்பனரல்லாதாரும் பங்கு கேட்கத் தொடங்கிக் கொஞ்ச பங்குகளைப் பெற்றும் வந்தார்கள்.

இதன்பின் திடீரெனப் "பூதம் போல்" புறப்பட்டது சுயமரியாதை இயக்கம். இது அடிப்படையில் கைவைத்து விட்டது. பார்ப்பனர்களின் செல்வாக்கிற்குக் காரணமான மதத்தில் கைவைத்தது. பார்ப்பனர்கள் பாடும் திண்டாட்டத்திற்கு வந்துவிட்டது. இதற்குக் காரணம் குடி அரசும், ஈ. வெ. இராமசாமியுமே ஆவார்கள். உண்மையிலேயே நமக்குக்கொஞ்சம் கடவுள் நம்பிக்கையிருந்தால், அல்லது அவதார நம்பிக்கையிருந்தால் அல்லது புராண நம்பிக்கை யிருந்தால் நமது காரியம் வேருகப்போயிருக்கும். சந்தேகமில்லாமல்,டாக்டர், நாயரையும், சர். தியாகரையும், ஈ. வெ. இராமசாமியையும் கடவுள் அவதாரமாகத் தீர்த்துவிடுவேன். காந்திப்புராணம்போல்,நானும் புராணங்கள் பாடிவிடுவேன். என்னலும் "காமாச்சோமா" வென்று பாட்டுக்கள் பாடமுடியும்? "ஸ்க்குரூஉ லூஸ்" என்றுல்சாமானியமாகநினைத்துக்கொள்ளாதீர்கள்;

இந்தநிலையில் பார்ப்பனர்கள் மீண்டும் தங்கள் மதச்செல்வாக்கை நிலை நாட்ட என்னென்னமோ செய்கின்றனர். ஆனால் நாளுக்கு நாள் மதம் அழிகிறதே ஒழிய மேலுக்கு வரக்காணும். வரவும் வராது. இதற்குக் காரணம் அறிவுவளர்ச்சியும் தரித்திரமே யாகும். அறிவுவளர்ச்சியிருக்கட்டும், தரித்திரத்தைப்பற்றிக்கொஞ்சம் யோசனை செய்யுங்கள்.

அப்பா! அதன் கொடுமை அளவற்றது. எம்மால் சொல்லமுடியாது. வர்ணிக்க நமக்கு நேரமில்லை. ஆகையால் "மிகக்கொடுமை! மிகக்கொடுமை!! தரித்திரம்மனிதனை எந்தக்காரியத்தையும் செய்யச்சொல்லும்" என்றஅளவோடுவிட்டுவிடுகின்றோம். இன்று வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்பட்டிருப்பது எதனால்? தரித்திரத்தினால் அல்லவா? தரித்திரம் இல்லாவிட்டால் என் வேலை தேடுகிறார்கள்?

இன்று பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களில் யாரேனும் அறிவுவளர்ச்சிக்கென்று படிக்கிறார்களா? இல்லையே! எல்லோரும் உத்தியோகம், அதாவது வேலையை நினைத்துத்துக்கொண்டுதானே படிக்கிறார்கள். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை எதற்காகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள்? தங்கள் பிள்ளைகள் படித்து உத்தியோகம் பண்ணவேண்டும்! பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையோடுதானே பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள்?

ஒவ்வோராண்டிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளியேறுகிறார்கள். அவர்கள் உத்தியோகம் ஒன்றையே தேடுகிறார்கள். அவர்களுக்கும் அதைத்தான் செய்யமுடியும். வேறு வேலை செய்ய சக்தியுமில்லை, அறிவுமில்லை. ஆகையால் வேலை கிடைக்காமல்வயிறு காய்கின்றார்கள். டம்பமாகவும் வாழவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அவர்களிடம், மதம் வேண்டும், கடவுள் வேண்டும், மோட்சத்திற்கு வேண்டிய காரியங்களைச்செய்ய வேண்டும் என்றுகூறினால் எவன் கேட்பான். வேண்டுமானால் கோயில் உத்தியோகம் கொடுத்தால் கேட்பான். வயிற்றுப்பிழைப்புக்காக இவனும் வைதீகவேஷம்போடுவான். பசி வந்திடஎல்லாம் பறக்க வேண்டியதுதானே. சிலநாள்களுக்கு முன் ஒரு அதிசயமான செய்தியைக் கேட்டோம். காரச்சிப் பக்கத்தில்உள்ள இருபத்தைந்து பட்டதாரிகள்உழவுத்தொழில்கள் செய்யும் பொருட்டு க்கலப்பைகளைத்தூக்கிக் கொண்டு புறப்பட்டார்களாம்! இதுநமக்குச்சந்தோஷமான செய்தியே யாகும். ஆனால்ஒரு சந்தேகம்! பார்ப்பனப் பட்ட

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

சமூகமும், பொருளாதாரமும்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(X)

உயிர்கள் யாவும், பொருளை (Things) ப்பற்றியுள்ளன. எல்லா உயிரும், பொருளை, ஆதாரமாகக் கொண்டுள்ளன. உயிர்கள், பொருளால் ஆக்கப்பட்டும், பொருளால், தத்தம் சீவனத்தை நடத்தியும், வாழ்ந்தும், வருகின்றன. பொருள் இன்னியில் எந்த சீவனும் வாழ முடியா. உயிர்வாழ்வுக்கு, மதமும் வேண்டா, ஜாதியும் வேண்டா, கடவுளும் வேண்டா, அரசியலும் வேண்டாவாம். பல கோடி வருஷங்களாக மனிதனுக்கு முந்திய கோடான கோடி உயிர்கள் மதமின்றி, ஜாதியின்றி, அரசும் இன்றி வாழ்ந்து வந்திருக்கின்றன. இன்றைக்கும் லட்சக் கணக்கான சீவராசிகள், ஜாதி,மத, ஆட்சி, இன்றி வாழ்ந்து வருவதை யாவருக்கும்பிரத்தியட்சம். ஆனால் உயிர்களில், மனிதன் ஒருவனே ஜாதி மத கற்பிதங்களில் கட்டுண்டு, தனக்கே தீமைகளை விளைவித்துக்கொள்கின்றான். பல கோடி வருஷங்களாக, மனிதனுக்குக் கீழுள்ள சீவன் யாவும், அனராஜ்யமாகவே (Anarchism) வாழ்ந்து வந்தும், இன்றைக்கும் வாழ்ந்தும் வருகின்றன. மனித ராசி ஒன்றுக்கே, அதனை அடக்கி ஆளும் அரசு சம்பவித்தது. மற்ற உயிர்களில் எதற்கும், இவ்விதமான அரசு இல்லை என்றே சொல்லலாம். இங்கே கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அதாவது, மற்ற உயிர்களின் சமூகங்களில் தோன்றாத இந்த ஜாதி, மதம், அரசும், மனித வர்கத்தில் மாத்திரம் தோன்ற காரணமென்னவென கேட்கலாம்? அதற்கு இதுகாறும், யாரும் சரியான விடை பகர்ந்தாரில்லை, எனினில், அதற்குத்தகுதியானவிடை பகர, அனுபவமில்லையாகையால் தான், சென்ற 10, 15 வருஷங்களாகத் மனிதனுடைய நடத்தைகளை விசாரித்து வருங்காலை இந்தக்கேள்விக்கு விடை விளங்கலுற்றது.

மனிதனுக்கும் மற்ற சீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றே. மனிதனுக்கும் மிருகாதிகளுக்கும் உருவத்திலாகிலும்,உருப்புகளிலாவதும், நிரேக செயல்களிலாகிலும், வளர்ச்சியிலாகிலும்முக்கியமான வித்தியாசங்கள் ஒன்றுமில்லை எனினும், பேசும் விஷயத்தில் மாத்திரம், வித்தியாசமுண்டு. மற்ற மிருகாதிகள் பேச சக்தி பெறுதவை, மனிதனொருவனே பேசும் சக்தி படைத்தவன், பண்டைக் காலத்தில் மிருகமாய் இருந்த மனிதன், மனிதனாக மாறுமுன்பு, அலாலி (Alali), அதாவது பேசாத மனிதனைப் போன்ற ஓர் வித சீவனாக வாழ்ந்திருக்கலாமென, மெஞ்ஞானிகள் பூமியில் புதையப் பெற்ற சில உருவக்கூடுகளிலிருந்து (Fossils) யூகிக்கின்றார்கள். எதோ சில காரணத்தால் மனிதன் பேச ஆரம்பித்தான். அந்தக் காலமுதல், மனிதன், தான் காணும், கேட்கும், பரிசிக்கும் பொருள்களுக்கு பெயரிட சக்தி பெற்றான். இத்துடன், தான் காணாத, கேட்காத, பரிசிக்காத கற்பனை சொற்களையும் உண்டாக்கிக் கொண்டான். இந்த சொற்களில் அடங்கியவை, கடவுள் எனுஞ் சொல், மதமென்ற சொல், ஜாதி யென்ற சொல், முதலிய சொற்கள் கற்பனை சொற்களென அரிதல் வேண்டும். ஆதலின், மனிதன் பேசும் வன்மையால், இவ்வித கற்பனை சொற்களை சிருஷ்டி செய்து கொள்ள, தூர் அதிர்ஷ்டம் பெற்றான். மற்ற மிருகாதிகள் பேசுந் திறமையைப் பெறுமையால், கற்பனை செய்ய முடியவில்லை. ஆதலின் மிருகவர்க்கங்கள் யாவும் கடவுள், ஜாதி, மத, கற்பனைகள் இல்லாமல், பல கோடி வருஷங்களாக, சுகித்து வாழ்ந்து வருகின்றன. மனிதனை வெனில், பேசுந்திறமையை நல்வினியோகப்படுத்தி வந்தாதாடு, கற்பனைகளாலும், புராணக்கட்டுக் கதைகளாலும் தனக்கே தீங்கு தழைத்துக் கொள்ள, கடவுளென்ற பதத்தையும், ஜாதி என்றபதத்தையும், மதமென்ற பதத்தையும் சிருஷ்டித்துக் கொண்டான். இதுதான் இந்த சொற்களின் சரித்திரம்.

மனித வர்க்கத்தில், அரசியல் ஏற்பட்ட முகாந்திரத்தையும், முன்னரே, அங்கும் இங்கும் வரைந்துள்ளோம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், எல்லா வித அரசும் சிறுபான்மையோரால் பெரும்பான்மையோரை, அடக்கி ஆள ஏற்பட்ட திட்டங்களென அறிக. இந்த நிட்டம் நீடுழி வாழ வேண்டி அந்தச் சிறுபான்மையோர், மற்றபெரும்பான்மையோராகிய 159 கோடி உலக பாமரர்களை, ஜாதியிலும், சமயத்திலும் உழன்று கிடக்குமாறு செய்து வரும் காட்சியே எனவும் அறிக.

ஆதலின், ஜாதி சமயம் ஒழிய வேண்டுமானால், அதனை ரட்சித்து வரும் அரசியலையும் ஒழித்து விடவேண்டும். ஆஸ்திக அரசு இருக்கும் வரை, நாஸ்திக உலகம் கிட்டா. இரண்டாவது எல்லா அரசும் எல்லா மதங்களும், எல்லா ஜாதி சமயங்களும், பொருளாதார செல்வாக்குப் பெற்றுள்ளதாயால் அந்தப் பொருளாதாரம் மாறினால் ஒழிய, அரசும், மதமும், ஜாதியும் மாறவே மாறு. இந்த சமதர்ம சித்தாந்தத்தை சற்று விபரமாக வரைந்து, நாம் செய்ய வேண்டிய வேலையை முடிவு செய்வோம்.

முதலில் மதத்தை எடுத்துக் கொள்ளுவோம். மதங்கள் யாவும், எந்த மதமானாலும் சரி, புத்த மதமானாலும், இந்து மதமானாலும், கிருஸ்து மதமானாலும், மகமதிய மதமானாலும், எல்லா மதங்களும் பொருளாதாரத்தில் நெருங்கிய சம்பந்தம் பெற்றுள்ளவை. பொருளின் செல்வாக்கை நோக்கியே, எந்த மதங்களும் கட்டப்பட்டுள்ளன. பொருளாதார செல்வாக்கு இல்லாமற் போமாகில் மதங்கள் க்ஷீணித்துப் போகும். இன்றைக்கு, மதங்கள் உலகில் செழிப்படைந்து வருவது பொருள் ஆதாயம், மதஸ்தர்களுக்கு இருப்பதால் தான். இந்த உலகில் மதங்களால் அடையும் ஆதாயப் பெருக்கு மாத்திரமல்ல. இனி வரும் கற்பனை உலகிலும், ஆதாயம் இருப்பதாகவே கோரிக்கையுமுண்டு. இவ்விரண்டு ஆதாயங்களால், மதங்கள் ரட்சிக்கப் பட்டு வருகின்றன. உலகில் மதங்கள் தழைத்து வருவது பக்தியாலுமல்ல, கடவுள் கிருபையாலுமல்ல, கடவுள் இருப்பதாகச் சொல்வதாலுமல்ல; ஆனால் கோயில்களாலும், கோபுரங்களாலும், மந்திரங்களாலும், பூசை நைவேத்தியங்களாலும், மற்ற ஆர்ப்பாட்ட வேடிக்கை விநோதங்களாலுமே மதங்கள் வளர்கின்றன. இன்றைக்கே கோயில்களிலும், மசூதிகளிலும், விக்கிரகங்களிலும் (புத்தர் கோயில்கள்) நடக்கும் வேடிக்கை வினோதங்களும், ஆடல் பாடல் சங்கீதங்களும், மற்ற ஆடம்பரங்களும், நிறுத்தி விடுவோம்! யாருக்கு பக்தி தழும்பு கின்றதைப் பார்ப்போம்!! யார் கோயிலைக் கண்டு கைகூப்புகின்றார்கள் என்று கவனிப்போம்!!! யாரும் கோயிலைக் கண்டு, கொண்டான் அடிக்கமாட்டார்க ளென்பது நிச்சயம் கோவில் மூலமாக சீவிப்போர் அனைவரும் மதங்களை கை விடுவது நிச்சயம். "ஆதாயமில்லாத செட்டி, ஆற்றோடு போனான்" என்ற கதை போல் லாபமில்லாத பக்தன், வீட்டுக்குப் போவது நிச்சயம்.

கோயில்களால் பலருக்கு ஆதாயம் விளைவதால், மதங்கள் இந்த பொருளாதாரத்தையே நாடி நிற்கின்றன. இந்த ஆதாயம் அற்றுப்போன இடத்து, மதமும் அற்றுப் போவதற்குத் தடை என்ன? புத்த குபேரர்களை, மற்றவர்களைப் போல், வேலை செய்து பிழைக்க வேண்டுமென்று சொல்லும் பட்சத்தில், எந்த பிக்ஷு (Bikshu), பிக்ஷாணி (Bikshuni) காஷாயம் தரிப்பதைப்பார்க்கலாம், மதகுருமார்களுக்கு மதங்களால் ஏதாகிலும் பொருளாதார செல்வாக்கு இருப்பதால்தான் மதங்களைத் தழுவி வருகின்றனர். அது இல்லாவிடில் மதங்கள் மதகுருமாரின்றி மழுங்கிவிடுமென்பதற்கு சந்தேகப்படவேண்டியதில்லை.

ஜாதியும் பொருளாதார நட்பிலேயே கலந்துள்ளது. நான்கு வருணத்தார்களாகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்களுக்குள் ஏற்பட்ட வேற்றுமை பொருளாதாரத்தை யொட்டியே ஜனித்திருக்கவேண்டும். எப்படியெனில் கடைவருணத்தாராகிய சூத்திரன் ஏழையாகவே இருந்து வந்திருக்கின்றான். இன்றைக்கும் பிராமணர்கள் பெரும்பான்மை சூத்திரரைவிட பொருளைபெருத்திருப்பதைப்பார்க்கலாம் எந்த கிராமத்திலும் பிராமணர்கள்தான் செல்வத்திலும், செல்வாக்கிலும் மிகுந்தவர்கள் ஆதிவேத காலத்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

பாழாகிறது 12000 கும்பகோணைக்கொள்ளை.

[தேசீயத்துரோகி]

அடுத்த வருஷத்தில் மாசி மாதத்தில் வரப்போகும் மகத்திற்கு மகாமகம் என்று பெயர். இது பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருதடவை கும்பகோணத்திற்கு வரும் ஒரு கொள்ளை நோயாகும். இந்தக்கொள்ளை நோய் கும்பகோணத்தை மட்டிலும் விட்டுவிடுவதில்லை. சென்னை மாகாணத்தையே பிடித்து ஒரு ஆட்டம் ஆட்டிவிடும். சென்னை மாகாணத்தைத்தவிர வெளிமாகாணத்தில் உள்ளவர்களில் சிலரையும் கூட பிடிக்காமல் விடுவதில்லை.

கும்பகோணத்தில் அழுக்கும் பாசியும், நாற்றமும் பிடித்த குளம் ஒன்று இருக்கிறது; அதன் பக்கத்தில் சென்றாலே மூக்கைப்பிடித்துக் கொண்டுதான் போகவேண்டும். அந்தக்குளத்தில்தான் பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சல் இலைகள் ஒதுங்கிக்கிடக்கும். குழந்தைகள் ஆபாசம் பண்ணிய துணிகளையும், பாய்களையும் அதில்தான் கழுவுவார்கள். தீட்டுக்காரப் பார்ப்பனப்பெண்களும், மற்றவர்களும் அதில்தான் சாதாரண நாளில் முழுகுவார்கள். விபசாரம் பண்ணிப்பிள்ளை பெறும் முக்காடு போட்ட அம்மாமார்களும், அந்தக் குளத்தில்தான் குழந்தைகளை அமிழ்த்தி மோட்சத்திற்கு அனுப்புவார்கள். எல்லாப்பாவங்களையும், அந்த அற்புதமான தீர்த்தம் தீக்கிவிடும். இத்தகைய "மகாத்மீயம்" பொருந்திய குளம் அது. அதில் வந்து மாசிமாச மகத்தில் முழுகிவிட்டால் உடனே மோட்சமும் சகல ஐசுவரியங்களும், கிடைத்துவிடுவதாக இந்துக்களின் நம்பிக்கை. இதன் பொருட்டே இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் திரளான மக்கள் வந்து கூடி அந்தக்குளத்தில் விழுந்துபோவார்கள. ஐயோ! அந்தப்பரிதாபக்காட்சி பார்க்க முடியாததாகும். அன்று பிடிக்கும் நாற்றம் ஒரு மாதம வரையிலும் உடம்பை விட்டு நீங்காது ஊர் முழுதும் நாற்றம். அது முதல் மாகாணம் முழுதும் காலராபரவி விடும். ரயில்வேகாரனுக்குகொழுத்த வரும்படி, இந்துக்களின்பணம், குறைந்தது 5-லட்சமாவது நஷ்டமாகும்.

இதுமாத்திரம் அல்ல. கும்பகோணம் நகர மக்களுக்கும் பெருவாரியான நஷ்டம். இந்த மகாமகத்தை முன்னிட்டு இப்பொழுதே நகரசபையார் பணத்தைச் செலவழிக்க திட்டம் போடுகின்றனர். மகாமகத்தின் பொருட்டு ரோடுகளைச் சீர்திருத்தவும், புதுரோடுகள் போடவும் அறுபதினாயிரம் ரூபாயும், மகாமகக்குளத்தைச சுத்தமபண்ண பன்னிரண்டாயிரம் ரூபாயும் திட்டம் போட்டு நகரசபையின் ஆலோசனைக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ரோடுகளைச்சீர்திருத்தம் பண்ணுவதும், புதுரோடுகள் போடுவதும், நகரத்திற்கே ஒரு பொதுவான நன்மையைத்தருவதாயிருப்பதால் அது அவ்வளவு மோசமான செலவல்ல. ஆனாலும் இந்தப்பணப்பஞ்சகாலத்தில் இவ்வளவு பணத்தை மண்ணில் கொட்ட வேண்டிய அவசியமில்லை. ஆனால் குளத்தைச்சுத்தம்பண்ண வேண்டும் என்பதற்காகச் செலவிடலாமென்று ஆலோசிக்கப்படும் பன்னிரண்டாயிரம்ரூபாயும் பாழ்? பாழ்!! பாழ்!!! என்றுதான் சொல்லுகிறேம். இந்தமாதிரியே ஒவ்வொரு மகா மகத்தின் போதும் செலவழிந்து கொண்டுதான் வந்திருக்கலாம். ஆகவே அந்தப்பாழும் சாக்கடையானது இதுவரையிலும் எத்தனை லட்சம் ரூபாய்களை விழுங்கியிருக்கும் என்று யோசித்துப்பாருங்கள்!

ஜனங்களின் வரிப்பணம் இவ்வாறு பாழாகுவதற்குக் காரணம் என்ன? இந்துக்களின், வைதீகர்களின், மதியற்ற தன்மையல்லவா? சுதேசிப்பிரசாரம் பண்ணுகிறவர்கள் யாராவது இதைப்பற்றி பேசுவார்களா? இந்தமாதிரி 12000 ரூபாயைக் குளத்தில் கொட்டிப்பாழாக்கி, நமது இந்தியாவில் உள்ள ஜனங்களையெல்லாம் 'கும்பகோணத்திற்கு வாருங்கள்! என்று கூவியழைப்பதால் வரும்நஷ்டத்தை எந்தத்தேசாபிமானியாவது சிந்தித்துப்பார்க்கின்றார்களா? ஜனங்கள் ரயிலுக்குக்கொடுக்கும் பணம் எவ்வளவு? அவை எங்கேபோய்ச்சேருகிறது. கும்பகோணத்திலேயே கூட்டத்தில் மிதியுண்டு சாகப்போகிறவர்கள் எவ்வளவு பேர்? காலரா, ஜுரம், முதலிய நோய்களால் கும்பகோணத்திலும் மகா மகத்திற்கு வந்து போன ஜனங்களுடைய சொந்த ஊர்களிலும் சாகப்போகின்றவர்கள் எத்தனைபேர்? பிறகு வைத்திய உதவிக்காக ஆகும் செலவு எவ்வளவு? கும்பகோணத்திற்கு வந்தவர்கள் கூட்டத்தில் நகைகளையும், பணங்களையும் திருட்டுக் கொடுப்பதன் மூலம் நஷ்டமாகும் பொருள் எவ்வளவு? என்று எந்த அறிவுள்ள தேச பக்தனுவதுயோசித்துப் பார்க்க முன்வருவானு?

அல்லது கும்பகோணம் வாசிகளும், நகர சபையாரும் தான் இவைகளை யோசித்துப்பார்க்க முன்வருவார்களா? உண்மையிலேயே இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து, நமது மக்களுக்கு அவர்களுடைய அறியாமையால் உண்டாகப் போகும், உடல், பொருள், உயிர் நஷ்டங்களைத் தடுக்க விரும்பினால் என்ன செய்ய வேண்டும்? உடனே குளதத்திற் கொட்டும் பன்னீராயிரத்தை பத்திரப்படுத்த வேண்டும். வேண்டுமானால் இனி எந்தக்காலத்திலும் இந்த எண்ணமே வராமலிருக்கும் பொருட்டு அந்த மகா மக ஆபாசக்குளத்தைத் தரை மட்டமாகத் தூர்ப்பதற்குச் செலவழிக்கலாம். எங்கும் விளம்பரம்பண்ணி,மகாமகத்தை முன்னிட்டு யாரும் கும்பகோணம் வரக் கூடாதென்று தெரிவித்து விட வேண்டும். மகாமகத்தின் போது கும்பகோணத்திற்கு வருவதால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் காட்ட வேண்டும். இவ்வாறு செய்வது தான் மக்களை அறிவுடையவர்களாகச் செய்வதற்கும், பொருள் நஷ்டத்தைத் தடுப்பதற்கும் வழியாகும். இதனால் நமது நாட்டு "ஏழை மக்களுடைய பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மீதமாகும் என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய உடலுக்கு வரும் கஷ்டமும், நேரத்திற்கு உண்டாகும் நஷ்டமும் மீதமாகும் என்பதிலும் ஐயமில்லை. இதை விட்டு விட்டு நகரின் ரோடுகளை யெல்லாம் சுத்தப்படுத்தி வைத்திருக்கிறேம். மகா மகச் சாக்கடையையும் சுத்தம் பண்ணியிருக்கிறேம். ஆகையால் இந்துக்களே வாருங்கள்!" என்று விளம்பரம் பண்ணுவதனால் என்ன நன்மையுண்டு? இன்னும் ரயில்வேக்காரர்கள் செய்யப் போகும் விளம்பரங்கள் வேறே யிருக்கின்றன. அவர்கள் இதற்காக இப்பொழுது முதலே வர்ணப்படங்கள் தயார் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகா மகத்தின் புராணக் கதையையும் பார்ப்பனர்களைக் கொண்டு எழுதித் கொண்டிருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. ஆகவே இனி எஸ். ஐ. ஆர். காரர்கள் படங்களைப் போட்டு, புராணக்கதைகளைக் கூறிப் பொது ஜனங்களுக்கு கும்பகோணத்தின் பெருமையை உபதேசம் புரியத் தொடங்கிவிடுவார்கள்.

ஆனால், இந்த மாதிரி இச்சமயத்தில் செய்யச் சம்மதித்து விட்டால் அதாவது மகாமகச் சாக்கடையைச் சுத்தப் படுத்தாமலும் கும்பகோணத்திற்கு மகா மகத்தை முன்னிட்டு யாரும் வரக் கூடாதென்றும் பேசாமல் இருந்துவிட்டால்,கும்பகோணம் பார்ப்பனர்கள் சும்மாயிருப்பார்களா? என்பது தான் சுயமரியாதைக் காரர்கள் கேட்கும் கேள்வி. உடனே அவர்கள் சாஸ்திர மூட்டைகளையும், மடிசஞ்சிகளையும் தூக்கிக் கொண்டு வைசிராயிடம் போய் எங்கள் மதத்திற்கு ஆபத்து வந்து விட்டது என்று முறையிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அதிலும்முடியாமல் போனால் இங்கிலாந்திற்குக் கூட, சாஸ்திரமூட்டை, மடிசஞ்சி இவைகளுடன் கூட கங்கா ஜலமும் களிமண்ணும் சேர்த்து எடுத்துக் கொண்டு போவார்களென்பதிலும் சந்தேகமில்லை.

ஆகவே, நமது செல்வங்களைப் பாழாக்குவது எவை என்பதைப் பாருங்கள். நமக்கு மாத்திரமா? அசாங்கத்தாருக்கும் இதனால் வரும் நஷ்டம் அளவற்றவை. அவர்கள் அன்றைய தினம், நகரத்தில் ஏராளமான போலீஸ் அதிகாரிகளையும் சுகாதார அதிகாரிகளையும், டாக்டர்களையும் வைத்திருக்க வேண்டும். இந்தச் செலவெல்லாம் யார் தலையில் விடிகிறது? ஆகையால் இது போன்ற முட்டாள் தனத்தை ஒழிக்க வேண்டியது அவசியமாகும் என்று சொல்லும் சுயமரியாதைக் காரர்கள் நாட்டின் மூன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறகிறவர்களா? அல்லது இந்த மாதிரியான்வைகளைப் பிரசாரம் பண்ணும் வைதீகர்களும், பார்ப்பனர்களும், அவர்களுக்குத் துணை செய்யும் காங்கிரஸ்காரர்களும் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதுகின்றவர்களா? என்று யோசனை பண்ணிப் பாருங்கள்! அழுக்கும், பாசியும், நாற்றமும் எடுத்த ஒரு பாழுங் குளத்தில் குளிப்பதனால், தாங்கள் செய்த பாவமெல்லாம் போய் விடுகிறது! ஏராளமான புண்ணியம் வருகிறது! மோட்சம் கிடைக்கின்றது! நினைத்தவை நிறை வேறுகின்றன. என்று நம்புவதை விட முட்டாள் தனம் வேறு என்ன இருக்கின்றன? நாற்றமடிப்பதையும், வியாதி வருவதையும் கண்கூடாகப் பார்த்திருந்தும் இவ்வாறு செய்வதில் என்ன அருத்தமிருக்கிறது? சுகாதார முறை அறிந்த டாக்டர்களில் எவ்வளவு பேர் சயின்சுபடித்த கலாசாலைப் பட்டதாரிகளில் எவ்வளவு பேர்? இந்தக் குளத்தில் விழுவார்கள் என்பதை நினைக்கும் போது நாம் அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை! நமது மக்கள் கற்றவர்களாயிருந்தாலும், கல்லாதவர்களாயிருந்தாலும் அவர்கள் மூளையில் மதம், நம்பிக்கை என்னும் அழுக்குகள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே என்றைக்கு, மதமும் வைதீகமும், நம்பிக்கையும் நமது நாட்டை விட்டு ஒழிகின்றதோ அன்றுதான் நாம் உருப்பட முடியும் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது?

இந்த ஒரு மகா மகத்திற்கு மாத்திரம், முனிசிபாலிட்டியாரால், போட்டுகளுக்காக 60000 ரூபாயும், குளத்திற்காக 12000 ரூபாயும், ஆக 72000 எழுபத்திரண்டாயிரம் ரூபாய் செலவழிக்கத் திட்டம் போடப்படுமானால், மற்றபடி நமது நாடு முழுவதும் இது போல் நடைபெறும் திருவிழாக்களுக்கும், பண்டிகைக்கும் செலவாகும் பணம் எவ்வளவு? இவைகளால் நமது நாடு அடையும் பலன் என்ன? இதுவரையிலும் மேலும் மேலும், தரித்திரர்களாகவும், அடிமைகளாகவும், பகுத்தறிவற்றவர்களாகவும் ஆனதைத் தவிர வேறு என்ன பயனைப் பெற்றோம்? என்று ஆலோசனை செய்து பாருங்கள்! சுயமரியாதைக்காரர் சொல்லுவதன் உண்மை விளங்கும்.

மிருகங்களின் "தெய்வீகம்".

ஆரிய சமாஜத்தில் மாறுதல்.

ஆதி, பசுவும் ஒன்றே.

[சாமி. சிதம்பரனார்]

ஒரு தேசத்தில உள்ள மக்களின் பழக்க வழக்கங்களிலும், கொள்கைளிலும், நடையுடை பாவனைகளிலும் உள்ள வேறுபாடுகள் ஒழிந்து ஒற்றுமை ஏற்பட்டால் ஒழிய அத்தேசத்து ஜனங்கள் ஒரே ஜாதியாராக வாழ முடியாது. இவ்வாறு ஒரே ஜாதியாராக ஒன்றுபட முடியாத மக்கள் எப்பொழுதும் சுதந்தரம் பெற முடியாமலும், பெற்றாலும் அதை வைத்துக்கொண்டு வகையாக வாழத் தெரியாமலும் ஒருவர்க் கொருவர் சண்டை போட்டுக்கொண்டு அந்நியரிடம் நாட்டைக் காட்டிக் கொடுக்க வேண்டியதுதான்

இப்பொழுது நமது நாட்டு மக்களின் மனோபாவத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு கூட்டத்தார் தங்களுடைய தெய்வங்களை கொட்டுமுழக்குகளுடன் வணங்குவதே சரியென்று கருதுகின்றனர். ஒரு கூட்டத்தான் கொட்டு முழக்குகள் ஒன்றுமில்லாமல் தங்கள் தெய்வத்தை வணங்குவதே சரியென்று கருதுகின்றனர். ஒரு கூட்டத்தார் பசு முதலிய ஜீவப் பிராணிகளைத தெய்வங்களாக எண்ணி வணங்குகின்றனர். ஒரு கூட்டத்தார் அவைகளை உணவுப் பொருள்களாகக் கருதி உண்ணுகின்றனர். ஒரு கூட்டத்தார் கற்சிலைகளையும், மரப் பொம்மைகளையும் வைத்துத்தெய்வங்களாக வணங்குகின்றனர். மற்றொரு கூட்டத்தார் ஒன்றுமில்லாமல் வெறும் இடத்தை வணங்குகின்றனர். இவ்வாறான வேறுபட்ட கொள்கை காரணமாகவே நமது நாட்டில் அடிக்கடி வகுப்புக் கலகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதிலும் வடநாட்டில் நடைபெறும் இந்து முஸ்லிம் சண்டைகளுக்குக் காரணம் இத்தகைய மத வேறுபாடுகளேயாகும்.

எந்த மதத்தினராலுலும், எந்த வகுப்பினராலுலும், தங்கள் வேதங்கள் என்பனவே தெய்வ வாக்கென்றும், தாங்கள் கைக்கொண்டுவரும் பழக்க வழக்கங்களே பரிசுத்தமானவை யென்றும் நம்பிக் கொண்டிருக்கின்றவரையிலும், அம் மதத்தினர்களுக்கும், வகுப்பினர்களுக்கும் அவர்கள் கொள்கைக்கு மாறான மற்றமதத்தினர்களுக்கும், வகுப்பினர்களுக்கும் ஒற்றுமை ஏற்பட முடியாது.

உதாரணமாக இந்து மதத்தை எடுத்துக்கொள்ளுவோம். இந்துமதம் ஒரு புராதனமான மதமென்றும், உண்மையான மதமென்றும், பலரால் புகழப்பட்டுவருகிறது. விவேகானந்தர் ராமதீர்த்தர் முதலிய அறிஞர்கள் இந்து மதத்தின் மேன்மையை மேல் நாட்டினரிடமும் கூறி அவர்களும் ஒப்புக்கொள்ளும்படி செய்தார்கள். ஆனால் அவர்கள் கூறிய இந்து மத தத்துவங்களில் ஒரு கடுகளவுகூட இந்திய மக்களுடைய அனுஷ்டானத்தில் இல்லை. அவர்களும் மேல் நாட்டினருடைய மனத்தில் பதியும்படி ஏக தெய்வ வணக்கம், சகோதரத்துவம், முயற்சி, தியாகம், அன்பு முதலியவைகள்தான் இந்து மதத்தின் அடிப் படையானவைகள் இவைகள்தான் இந்துமதம் என்று மேல்நாடுகளில் பிரசாரம்பண்ணியகாரணத்தால்தான் மற்றவர்கள் இந்து மதத்தைப்பற்றிப்பெருமையாக நினைத்தார்கள்.

ஆனால் விவேகானந்தர், ராமதீர்த்தர் போன்ற அறிஞர்களெல்லோரும் இந்து மதத்தின் தத்துவார்த்தங்களைக் கூறினார்களே யொழிய, இந்து மதத்தின் உண்மையான வருணாச்சிரம தர்மத்தையும், சடங்குகளையும், கண்டவற்றையெல்லாம் தெய்வங்களாக வணங்கும் மூட பக்தியையும் பற்றிக் கூறவில்லை. உண்மையில் இந்துமதம் வருணாச்சிரம தர்மம், சடங்குகள், பல தெய்வ வணக்கங்கள் ஆகிய அஸ்திவாரங்களின்மேல்தான் கட்டப்பட்டிருக்கின்றன. அஸ்திவாரங்கள் ஒழிந்தால் இந்துமதமும் ஆட்டங்கண்டு விழுந்துவிடும். இவைகளைத்தான் நமது நாட்டில் உள்ள வைதீகர்களும், மதாபிமானிகளும், காப்பாற்றவேண்டுமென்று கூறுகிறார்கள். அரசியலிலும் இவைகளுக்குததான் பாதுகாப்புவேண்டுமென்றுசொல்லுகிறார்கள்.

"ஏக தெய்வ வணக்கம், சகோதரத்துவம், முயற்சி, தியாகம், அன்பு இவைகள்தான் இந்துமதம். ஆகையால் சாதி, சடங்கு, பல தெய்வ வணக்கம் இவைகளை ஒழிக்க வேண்டும்" என்று சீர்திருத்த வாதிகள் கூறினால், உடனே வைதீகர்கள் அந்த உயர்ந்த கொள்கைகளைப் பக்குவமுடையவர்கள் தான் அனுஷ்டிக்கலாமே யொழிய எல்லோரும் அனுஷ்டிக்க முடியாது. அதாவது உலக ஆசையைத் துறந்த ஞானிகள் என்பவர்கள் தான், சாதி, சடங்கு, பல தெய்வ வணக்கங்களை விட்டிருக்கலாம், மற்றவர்கள் எல்லோரும் அவைகளைக் கைக்கொண்டே தீர வேண்டும்" என்று சொல்லி விடுகின்றார்கள். அதற்கும் இந்து மத வேதங்களும் சாஸ்திரங்களும் இடங்கொடுத்தே வருகின்றன. இந்தக் காரணத்தால் தான், இந்து மதத்தில் சீர்திருத்தம் பண்ண ஆரம்பித்த ராமானுஜர், சைதன்யர், ராமகிருஷ்ண பரம ஹம்சர், விவேகானந்தர், ராமதீர்த்தர் முதலியவர்களின் கொள்கைகளெல்லாம் ஒரு பயனும் கொடுக்காமல் ஒழிந்தன.

இவ்வாறு இந்து மதத்தைச் சீர்திருத்தம் பண்ண ஆரம்பித்தவர்களுக்குள், ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்தவராகிய தயானந்த சரஸ்வதி என்பவரும் ஒருவராவர். இவர்பெரும்பாலும் முஸ்லிம் மதத்தைப் போலவே, ஏக தெய்வ வணக்கம், ஒரே வேதம், விக்கிரக ஆராதனை யில்லாமை யாரையும் இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளுதல், எல்லோரும் ஒரே பழக்க வழக்கங்களை மேற் கொள்ளுதல் ஆகிய கொள்கைகளை அமைத்து ஆரிய சமாஜத்தை ஏற்படுத்தினர்.

ஆனால் இந்த ஆரிய சமாஜமும், இதன் சம்பந்தமான சுத்தி சங்கதன் இயக்கங்களும் தோன்றிய நாள்முதல் தான் வடநாட்டில் இந்து முஸ்லிம் கலகம் அதிகமாயிற்று என்று சொல்லலாம். இந்து மதத்தை ஒரே கடவுள் உள்ளதாகவும், ஒரே வேதம் உள்ளதாகவும், ஒரே சாதி ஆகக் கூடியதாகவும், ஒரே பழக்க வழங்கங்களை மேற் கொள்ளக் கூடியதாகவும் சீர்திருத்தஞ் செய்த ஆரிய சமாஜத்தார், பசுக்களை மாத்திரம், தெய்வத்தன்மையுள்ளதாக நம்பி வந்த காரணத்தாலேயே அதிக கலகங்கள்வந்து கொண்டிருந்தன. இன்றும் வந்து கொண்டிருக்கின்றன. இந்துக்கள் தமது திருவிழாக்களிலும், பண்டிகைகளிலும், யாகங்களிலும், ஆடுகளை மந்திரங்கள் சொல்லிப் பலியிட்டு அவற்றின் மாமிசங்களை உண்ணுவது போல முஸ்லிம்களும் அவர்களுடைய பண்டிகை காலங்களில் பசுக்களைபலியிட்டு அவற்றின் மாமிசத்தை உண்டு வந்தார்கள். இவ்வாறு செய்கின்றதில் ஒன்றும் தவறில்லையாயினும் இந்துக்கள் இதைச் சகிக்காமல்வெறுப்பதும், இதைக் கண்டு முஸ்லிம்கள் கோபம் அடைவதும், இந்துக்கள் தங்கள் ஊர் வலங்களையும், சாமிகளையும் கொட்டு முழக்குகளுடன், முஸ்லிம்களின் தொழுகை யிடங்களுக்கு நேரே நடத்திக் கொண்டு போவதும், முஸ்லிம்கள் இந்துக்களின் இச்செய்கையைக் கண்டு வெறுப்படைவதும் ஆகிய காரணங்களால் தான் அடிக்கடி வகுப்புக்கலகங்கள் வந்துகொண்டிருந்தன, இன்னும் வந்துகொண்டிருக்கின்றன.

ஆனால் இப்பொழுது ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், பசு தெய்வத் தன்மை யுள்ளதல்ல வென்றும், பசுவும் ஆட்டைப் போல ஒருபிராணி தானென்றும் நம்பக் கூடிய நிலைக்கு வந்திருப்பதை அறிந்து மகிழ்கின்றோம், இதனைக் கீழ்வரும் செய்தியால் உணரக்கிடக்கின்றது.

லாகூரைச் சேர்ந்த "வாக்சௌலி" வைதீக ஆர்ய சமாஜ இந்துக்கள் நிறைந்த ஊரில் நடந்த ஒரு ஆரிய சமாஜக் கூட்டத்தில் "கேன்ஷிராம் வெயிட்" என்பவர் பின்வருமாறு பேசியிருக்கிறார். "பசுவைப் பற்றி நாம் இது வரையிலும் நினைத்துக் கொண்டிருப்பது போல் இல்லாமல் அது ஒரு தெய்வத்தன்மை யுள்ள பிராணி அல்ல வென்று நினைப்பதற்குரிய காலம் வந்து விட்டது. அதையும் மற்ற மிருகங்களைப்போல ஒரு சாதாரண மிருகமாகத்தான் நினைக்கவேண்டும். ஆடு, பன்றி, பசு ஆகிய மிருகங்களுக்குள் என்ன வித்தியாசம் இருக்கிறது? நமது இந்துமத தத்துவத்தின்படி கடவுள் முன்னிலையில் மனிதன், மிருகம், பறவை ஆகிய எல்லா உயிர்களும் சமமேயாகும். கடவுள் இவைகளை வித்தியாசமாக நினைக்கமாட்டார். ஆகையால் மிருகங்களில் ஒன்றை மாத்திரம் தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கருதுவதில் சிறிதும்அர்த்தமில்லை. இக்காரணத்தால் பசு மாமிசம் சாப்பிடுகிறவர்களைத் தீண்டாதவர்களாகக் கருதுவது தவறுன தாகும். ஆகையால் சாதி வேற்றுமை கருதாமல் சமூக சமத்துவம் ஏற்படுவதன் பொருட்டு கலப்பு மணங்கள் நடைபெற வேண்டும். நமது ஆரிய சமாஜ கர்த்தரான தயானந்தர் அவர்களும் ஆகாரத்தையும், மதத்தையும் சம்பந்தப்படுத்திப்பேசினதே யில்லை. ஆகையால் இவைகளைக் காலத்திற்குத்தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளுவதில் குற்றமில்லை" என்ற கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். இக்தக் கருத்தை இந்துக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுவார்களானால். அனேகமாக வடநாட்டில் இந்துமுஸ்லீம் மதச்சண்டை ஒழிந்துவிடுமென்பதில் ஐயமில்லை.

ஆனால் இந்துமதம் இருக்கும் வரையிலும், எவ்வளவு காலமானாலும், எவ்வளவு சீர்திருத்தம் பண்ணினாலும், இந்துக்களின் பால் உள்ள மூடநம்பிக்கை ஒழியப்போவதில்லை என்றுதான் நாம் கூறுகிறோம்.

உதாரணமாக இந்தப் பசுவைப் பற்றி இந்துக்கள் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைக்கு அளவேயில்லை. இந்துக்களுடைய எல்லாத்தேவர்களும், இந்தப்பசுவினுடைய உடம்பிலேயே வசிப்பதாக இந்துக்களுடைய சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பசுவின் உடம்பில் தெய்வமில்லாத இடமில்லாத இடமேயில்லையென்றும், ஒவ்வொருமயிரையும் ஒவ்வொரு தேவர்கள் பிடித்துக்கொண்டு தொங்குகிறார்கள் என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. இதனால்தான் இந்துக்கள் பசுக்களைத்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

உலகத்தோ டொட்டஒழுகல்பலகற்று
ங்கல்லார்றிவிலாதார்.

(குறள்-15-ம் அதி. 10.)

"ஒத்ததறிவானுயிர் வாழ்வான்மற்
றையான் செத்தாருள் வைக்கப்படும்"

(குறள்-22-ம் அதி. 4)

மேனாட்டு உயர்ந்த நூலாசிரியர்களில் ஒருவரான குரோசே (Groce) என்பவர் சட்டம் (law) அல்லது ஆணை என்பதை ஓரினத்து அல்லது ஒருவகுப்புச் செயல்களைக் குறித்து அமைக்கின்ற 'சங்கல்பம் அல்லது தீர்மானம் என்று வரையறுத்துக் கூறுகின்றார். சட்டம்என்று சொல்கிற தீர்மானம் தன்னுள்ஒரே இனமான அல்லது வகுப்பானசெய்கைகளையே குறிப்பிடுவனவாக இருக்கின்றன. (Law is a volitional act which has for its content a class of actions.)

இலக்கியம் கொண்டே இலக்கணமைக்கப்படுவது போல செயல்களைக்கொண்டே சட்டங்கள் அமைக்கப்படுகின்றன: நன்மைபயக்கும் செயல்களின் பொதுவான இலட்சணங்களைப்பிரித்து அவை மாந்தர்தம்செயல்களில் அமையப் பணிப்பதே சட்டமாகும். மாந்தர்தம் முயற்சியால்பொருளீட்டியும் பேணியுமின்புறுதல் அவர்சமுதாய வாழ்க்கையில் தம்திறனையும் ஆண்மையையும் வலிபெற்றுமாண்புறச் செய்வதாகும் என்றவழக்கை அங்கீகரிக்கின்ற சமுதாயத்தில் மக்கள்தம் பொருளை பிறர் தீயவை செய்து அபகரித்தால், அச்செயலைக்களவென தடுக்கச் சட்டமிருத்தல் இயற்கையேயாகும். இச்செயல்கள் தம்முள்எத்தனையோ வழிகளில்தாரதம்மியமும் வேறுபாடுகளுமுடையனவாயிருக்கலாம். களவிடும் நோக்கங்களிலும், வழிகளிலும், பொருள்களிலும், காலங்களிலும், இடங்களிலும், களவுச் செய்கைகளில் ஒன்றிற்கொன்று வித்தியாசமிருந்தேதீரும். ஆனால் எல்லாக்களவுகளிலும், பிறர் பொருளை அபகரித்தல் என்றஒரு இலட்சணம் அமைவதால் களவென்னுமினம் அல்லது வகுப்பிற்குள் அச்செயல்கள் அடங்குகின்றன. ஆதலால் அச்செயல்களெல்லாம்குற்றங்களாகின்றன. குறிப்பிட்டசில இலட்சணங்களை ஒருஇனம் அல்லது வகுப்பாக்கி, அவ்விலட்சணங்களைதம்முள்கொண்ட செயல்களை யெல்லாம் சட்டம் ஒறுத்தலால், சட்டம் ஒரு இனப்பட்ட அல்லது வகைப்பட்ட செயல்களைப் பொருத்தமாயிருக்கின்றன. சட்டத்திற்கும் கொள்கைக்கும்ஒரு புறத்திலும், (Law and Principle) சட்டத்திற்கும், விதிகளுக்கும் (Law and rules) மற்றொரு புறத்திலும் முறையே வேறுபாடுகளிருப்பதைத் தெளிவாக்கலாம். கொள்கை ஓரினப்பட்டசெயல்களைக் குறிப்பதில்லை, ஒருவன் போய் பேசாதிருத்தலைத்தனது கொள்கையாகக் கொண்டொழுகலாம். இது இவனது மனத்தெழும் தீர்மானத்தைக் காட்டுகின்றது. இவன்மனதில் நின்று நிலவுகின்ற ஒருகுணத்தை அல்லது நம்பிக்கையைக்காட்டுகின்றது. ஆனால் சட்டத்தைப்போல் ஏதாவதோரினம்பற்றிய செயல்களைமட்டும் குறிப்பதில்லை விதிகளுக்கும் சட்டங்களுக்கும்என்னவித்தியாசமென்றால் சட்டங்களைப்போல எல்லாவிதிகளும் மனிதரது செயல்களைப்பற்றிய தீர்மானங்களைப் பொருத்ததல்ல. ("உப்புதண்ணீரிற் கரையும்" இதுஒரு அனுபவ வுண்மையான பொதுவிதி. இதன்உண்மையும் சக்தியும் மனிதன் தீர்மானத்தைப்பொருத்தல்ல. ஆனால் 'களவு செய்பவருக்குக் கடுங்காவலுண்டு' என்றசட்டத்தில் மனிதர் தீர்மானம் வெள்ளிடைமலை. ஆனால் சட்டங்களே, கருமங்களினின்றும் பிரித்த பொதுப்படையான தீர்மானங்களாகின்றன. அவ்விதமான தீர்மானம் உண்மையான, மனிதனுடையஅனுபவநிகழ்ச்சியில் அவ்வப்போது இயற்கையாக எழுகின்ற தீர்மானமாகாது. எனவே அதனை ஒருபாசாங்கான அல்லது உண்டாக்கிக்கொண்ட தீர்மான மென்னலாம். (Pretended volition) எனவே, விதிகளில், சிலசமயங்களில், தீர்மானக்குறிப்பு இல்லாமையும், கொள்கைகள் ஓரினப்பட்ட பலசெயல்களைக்குறியாமையும், ஆனால் சட்டங்களோ இவ்விரு குறிப்புக்களமைந்தனவாயிருந்தாலும் நமக்கு வெளிப்படையாகின்றது.

ஒவ்வொரு சமுதாயமும் தனது கட்டுப்பாட்டிற்கும், தான் முன்னேற்றமடைவதற்கும் சட்டங்கள் ஏற்படுத்திக்கொள்ளுதல் போல ஒவ்வொருமனிதனும் கூடதனது வாழ்க்கையின் நேர்மையும் உயர்ச்சியும் கருதி தனக்குத்தானே சட்டங்களும் விதிகளும் ஏற்ப்படுத்திக்கொள்ளக்காணுகிறோம். ஆனால் மனிதன் யாண்டும் தனக்குத்தானே விதிகள் அமைத்துக்கொண்டே இருப்பாளையினும் அவன் அமைத்துக் கொள்ளும்விதிகளோ எப்பொழுதும் நின்றுநிலவாமல் அடிக்கடி அழிந்து சிதைந்துஉருக்குலைகின்றன. நமக்கு ஒழுக்கவிசாரணை சம்பந்தப்பட்டமட்டில்ஒழுக்கம்பற்றிய விதிகளோ அல்லது சட்டங்களோ (அவைகள் மனிதன்தானேஏற்படுத்திக் கொண்டவையாயினும்சரி அன்றி தன்னுடைய சமுதாயத்தில் ஏற்றுக்கொண்டவையாயினும் சரி) அவனது ஒழுக்கத்திற்கு எத்தகைய உதவிகளாக அல்லது ஆணைகளாக இருக்கின்றன என்று பார்ப்பதவசியம், ஒருவன் அரசாங்கச்சட்டங்களைமீறு வானுயின் அரசதண்டனைக்கும், சமுதாயச்சட்ட திட்டங்களைமீறு வானுயின், சமுதாய வெறுப்புக்கும் கோபத்திற்கும், பாத்திரமாவது யாவருமறிந்த விஷயம் இது உலகவியல்பு. அதே மாதிரியாக, தானை ஏற்படுத்திக் கொண்ட விதிகளை மீறுவானுயின், அவன் 'மனத்துக் கண் மாசிலனுயின்', அவனுக்கு அது யாதொரு வருத்தமும்உண்டாக்காது ஒருவனுக்குப் பொதுவாகப் பெரும்பாலும் அரசியல் சமுதாய சட்டதிட்டங்களை மீராது அவற்றிற்கு அடங்கி நடப்பதே, ஒழுக்கத் துறையினின்று விசாரிக்கும் பொழுது கூடச்சிறப்பாகயிருப்பினும், சிற்சில சமயங்களில் அவைகளை மீறி நடப்பதே ஒழுக்கத்தாற் சிறந்த அறனுங் கடனுமாகலாம்.

எனவே நாமிங்கு பொதுவாக விதிகளோ, சட்டங்களோ, அவைகள் தர்ம சாஸ்திரங்களால் கணிக்கப்பட்டவையாயினும் சரி. "வல்ல வரனந்த கோடி மறைகளின் படியேயாய்ந்து சொல்லிய வறங்களா" யினுஞ் சரி, சமுதாய வழக்கில் அமைந்து கிடப்பனவாயினுஞ் சரி, முன்னேற்ற மடைந்துமுதிர்ச்சிபெற்றஒழுக்கத்திற்கு அவைகள் எத்தகைய சம்பந்த முடையனவென்று சிந்திப்பதவசியம். ஒழுக்கத்துறையில் இன்னோரன்ன சட்ட முதலியவை எது எப்படிப் போனலும் பணிந்தேதற்றுப் பின்பற்ற வேண்டிய சட்டங்கள், அல்லது கட்டளைகள், அல்லது ஆணைகள் என்று கூறுதற் கியலாது நாமிதுகாறும் கூறியவாற்றுன் ஒழுக்கம் பற்றி எழும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் தனித்த விசேஷமும் குறிப்புகளும் பற்றியவையாகலான் அவ்வப்பொழுது செய்ய வேண்டிய கடமையை அவ்வப்போதே தீர்மானிப்பது அறமாகும் என்று விளங்கும். எனவேமனிதன் அவ்வப்போது கடமையின்னதெனத் தீர்மானிக்கச் சுதந்தரம் பெற்றவனுக இருக்கிறான். சரியாகத் தீர்மானிக்கவோ அன்றி பிழைக்கவோ அவனுக்கு உரிமையும் சுதந்தரமுமிருக்கிறது. அவனுக்கு உரிய இச்சுதந்திரத்தை உபயோகப்படுத்துவதில் அவன் பொறுப்புடையவனுக இருப்பது பற்றியே அவனை அவனது செய்கைக்காக தூற்றவோ, போற்றவோ நியாய மேற்படுகிறது. ஆனால் நாமிச்சட்டங்களையும் விதிகளையும் யாண்டும் தள்ளொணு ஆணைகளாகவும், கட்டளைகளாகவும் எடுத்துக் கொள்வோமாயின், மனிதனுக்கு அவைகளைப் பின் பற்றி நடப்பதைத் தவிரத தானே தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பமே கிடையாது. உயிரற்ற இச்சட்டங்களும் விதிகளும் உயிருள்ள பேய்களாய். உயிருள்ள மனிதனை உயிரற்ற ஒரு சித்திரப் பாவையைப் போல் ஆட்டுவதாக ஏற்படும். இது பற்றி 'சட்டங்களும் விதிகளும் இருந்தாலும் இல்லாவிட்டாலு மொன்று தான்' ஆகையால் அவற்றை உபயோகமற்ற குப்பைகள்என்று எள்ளி இகழ்ந்து புறக்கணித்தல் கூடுமோ என்ற வினு எழுகின்றது. உலக வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் ஒழுக்கம் பற்றி எழுகின்ற சங்கடமான சந்தர்ப்பங்களாகிய புயல் காற்றுகளடித்து, மனதாகிய படகு அல்லலுற்று அவதிப்பட, அறிவெனும்மீகாமன் தத்தளிக்குங்கால், இச்சட்டதிட்டங்களும் விதிகளுமாகிய கலங்கரை விளக்கங்களை (Light houses) அறிவுக்கு உதவுகின்றன. எப்படி இந்தக் கலங்கரை விளக்கங்கள் ஒருவன் தோலை யெட்டிக் கரையுற வேண்டிய இடமாகமாட்டாதோ அதே போல் இந்தச் சட்ட திட்டங்களும் விதிகளும் அவனது கடமையாகுஞ் செயல் ஆகாது ஆனால் அவன் அறியாமை யென்னும் அந்தகார இருளிலகப் பட்டுத் திகைத்து பிழையாமல் இன்னின்ன வழிகள் இன்னின்ன இடத்திற்குச் செல்கின்றன, அவைகளால் இன்னின்ன பலா பலன்கள் நிகழும், என்று காட்டத் தக்கவாறு அந்த இடுக்கணுற்ற சந்தர்ப்பங்களில் ஒளிவீசி உதவச் சிறந்த கருவிகளாகவு கை காட்டி மரங்களாகவு மிருக்கின்றன. விதிகள் சட்டங்கள் முதலியன நாம்மேற்கூறியவாறு மனித வாழ்க்கையின் பெருஞ் சரித்திரத்தில் நிகழ்கின்ற ஆயிரக்கணக்கான சம்பவங்களின் தத்துவங்களையும், உணமைகளையும், பொதுத்தன்மையையும் மனித அறிவிலுறைகிரகித்து மனிதராற்சேமித்து வைக்கப்பட்ட பெருநிதிகளாகலான், அவைகள் இத்தகைய சிறந்த உதவியை நமக்கு நல்கின்றன.

நாம் உயர்ந்த மதில்களையுடைய அழகிய மாளிகை கட்டவேண்டுமாயின் அதனைச்சுற்றிலும் பலதூண்களாலும் பலகைகளாலும் கூடியசாரங்கள் ஏற்படுத்தி அவைகளின் உதவியைக்கொண்டே மாளிகையைக்கட்ட வேண்டியிருக்கிறது. மேற்கூறிய ஆசிரியரான குரோசே (Croce) என்பவர் நமது சட்டங்களை இத்தகைய சாரங்களுக்கு ஒப்பிடுகிறார், இத்தகைய சாரங்களை மாளிகை என மதிமயங்குவரேனும் அன்றி இத்தகைய சாதனங்களின் துணை வலிக்கோடலின்றி மாளிகை இயற்ற விரைபவரேனும் அவனியில் உண்டோ? சட்டங்களையும் விதிகளையும்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

ஒழுக்கநூல்.

அறநெறிகளின் ஆற்றலுமவசியமும்.

Function of moral criterion.

(S. லக்ஷ்மிரதன்பாரதி M. A., B. L.)

திரு. சிங்காரவேலு அவர்களுக்கு விண்ணப்பம்

திரு. ம. சிங்காரவேலு அவர்களுக்கு. தாங்கள் "குடி அரசு" பத்திரிகையில் எழுதிய "கடவுளும், பிரபஞ்சமும்", என்ற வியாசத்தைக் கண்ணுற்ற என்னைப் பல சந்தேகத்திலாழ்த்தி விட்டது.

ஆதலின் தாங்கள் பத்திரிகையின் மூலமாக அடியிற்கண்ட கேள்விகளுக்குத் தகுதியான பதில் வெளியிடுவீர்களானால், என் சந்தேகம் ஒரு வகையில் நீங்குமென்று நினைக்கின்றேன்.

கேள்விகள்:— (1) கற்பிற்குள் தேரை எப்படி ஏற்பட்டது. கடவுள் உதவியில்லாமல் அது எப்படி ஜீவிக்க முடியும்?

(2) மாம்பழத்தின் கொட்டையில் காற்றுப்புகக் கொஞ்சங்கூட வழியில்லாமலிருக்கையில், அதற்குள் இருக்கும் வண்டு கடவுள் உதவியில்லாமல் எப்படி ஜீவிக்க முடியும்?

—

கல்லுக்குள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும்.

இவை ஈசன் சிருஷ்டியா?

(ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.)

நமது ஈரோடு நிருபர் கல்லுக்குள் தேரை எப்படி வந்ததென்றும், மாங்கொட்டையில் வண்டு, புழு எவ்விதம் வந்து சீவிக்கின்றதென்றும், வினயத்துடன் வினவுகின்றார்? அவை, கடவுள் உதவியில்லாமல், எப்படி உண்டாகி, சீவிக்குமென்கின்றார்? இவ்வித கேள்விகள் பண்டைக்காலத்து தவறான பார்வையால் (Observation) எழுகின்றன. மாபெரும் ஞானிகளும், பழைய காலத்தில், தவறான அபிப்பிராயங்களை இத்தியாதி விஷயங்களில் கொண்டிருந்தனர். குழவி, புழுக்களைக்கொண்டு வந்து, தன்னைப் போல் மாறும்படிச் செய்வதாக சில ஞானிகளும் பாடியுள்ளார். மனிதர் பல நாள் காற்று இல்லாமல், குகைகளில் வாசம் செய்வதாகவும், மண்ணில் புதைக்கப்பட்டு, சில நாள் கழித்து, உயிருடன் மேலெழுவதாகவும் இதைப் போன்ற சில அற்புதங்களென்று (Miracles) கூறும், நடவடிக்கைகளைக்கேட்டு, அநேக பாமர மக்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். இவைகளெல்லாம். தவறுனப்பார்வையால் உண்டாகும் மருள். கவனித்துப்பார்க்கும் பட்சத்தில் இத்யாதி தோற்றங்களில் ஆச்சரிய மொன்றுமிரு. இந்தக் கேள்விகளை, ஆங்கில சிறுவர் சிறுமிகள், கேட்பதறிது. ஏனெனில், அவர்களை சிறு வயது முதல், பிராணிகள் நூலை கற்கச் செய்கின்றனர். அத்தியாதி மெஞ்ஞானத்தைப் புகட்டாமல், நமது சிறுவர்களுக்கு, "ஆதிச்சூடி அமர்ந்த தேவனை" என்றுனித்தியாப்பியர சத்தைதவக்கும்தோஷத்தால், நமதுசிறுவர்களும், பெரியோரும் சாதாரண பிரகிருத விஷயங்களைத்தெரிந்து கொள்ள சக்தியற்றவர்களாகின்றார்கள். சாதாரண அற்ப உயிர்களாகிய பல்லி விழுவதையும், சாதாரணமாக ஜலதோஷத்தால் தும்புவதையும், ஏதாகிலும் பேசுகையில் மணி அடிப்பதையும், நல்ல சகுனங்களெனக் கருதும் மூடப்பழக்கங்கள், சாதாரண விஷயங்களை விசாரித்தறியாத தோஷத்தாலென அறிதல் வேண்டும். பல்லி விழும் பலனைப்பற்றிகுறிப்பிடாத பஞ்சாங்கம், நமது தமிழ் நாட்டில் எழுதுவதற்று.

ஒத்தைப் பாப்பானைக் கண்டாலும், எண்ணைக் குடம் எதிரிட்டாலும், விதவை எதிர்பட்டாலும், கோரியகாரியம் நிறைவேறுவென்று எண்ணுவதும் இந்த அறியாமையால்தான். இவ்வித பொய் நம்பிக்கைகளால், கெட்ட குடும்பங்கள் எத்தனை! அரசுகளும் எத்தனை!!

கல்லுக்குள் தேரை இருப்பது சகசமான விஷயம்,. கற்பாறைகள் சந்து இல்லாமல் இருப்பதாக நமது கண்களுக்கு தோன்றுவிடினும் நுட்பமான சந்து (Crevices) பல கற்பாறைகளில் இருக்கின்றன. பூதக் கண்ணாடியைக்கொண்டு கற்பாறைகளைப் பார்த்தால், சிற்சில கீறல்கள் தோன்றும், இத்தியாதி கீறல்வாயிலாக, தேரையின் நுட்பமான முட்டை நுழையலாம். தவளை முட்டை, மிகச் சிறிதாக இருக்கும். கல் சந்துகளில், தண்ணீர் இரங்குவது சகஜம். அந்த காலங்களில், தேரை முட்டையில் வொன்றிரண்டு தண்ணீருடன் கல்சந்தின் வழியாகச் சென்று, கற்கள் சகஜமாகவுள்ள போரைக்குள் தங்கி, தண்ணீரில் ஜீவித்தும்வளர்ந்தும்வரும், அதற்குணவு, தண்ணீரிலுள்ள அழுக்கும், சிறிய கிருமிகளுமே. தேரை தங்கி வாழும் போரையிலுள்ள தண்ணீரைப் பரீட்சித்துப் பார்த்தால், அதில் அடங்கியுள்ள தவளைக்கு வேண்டிய உணவுகள் தெரியவரும், இதை மிகத் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

பழத்தில் வண்டுகள் நிறைந்திருப்பது ஆச்சரியமில்லை. வண்டின் கிருசாலிஸ் (Crisalys) அதாவது, அதன் முட்டையிலிருந்து வரும்புழு மெல்லிய பழத்தோலை குத்திக்கொண்டு உட்செல்லுகின்றன. நமது தோலைக் குத்திக்கொண்டு உட்செல்லும் சேரங்கு முதலிய கிருமிகள் போலவே வண்டு முட்டைகளும், பழங்களில் உட்செல்லுகின்றன. பழங்களில் புழு முட்டைகள் உள்நுழையசந்தில்லை யென்று சொல்வது அறியாமை. பூதக் கண்ணடியால் பார்த்தால் நமது தோலில் உள்ள சந்துகளைப் போன்றே, அனேக ஆயிரம்சந்துகளுள்ளதை (Pores) பார்க்கலாம். சூரிய கிரணமும், காற்றும் நுழையாத இடமொன்றுமில்லை என்றே சொல்லாம். இவை இரண்டில் சீவிக்கும் உயிர் பலவுள.

அசைவற்று இருக்கும் உயிர்களுக்கு, உணவு அநேகம் வேண்டுவதில்லை, உழைப்பவனுக்குத் தான் நிறைய அதிகம்உழைக்காதசன்னியாசிக்குஅதிகஉணவு வேண்டுவதில்லை, ஆதலின் பள்ளத்தில் புதைக்கப்பட்டவன், சில நாள் அன்ன ஆகாரமின்றி, உயிருடன் இருக்கலாம். தவளை அனேக நாளாக ஈரம் உண்டாகும் வரை காய்ந்த கருவாடு போல் கிடப்பது சாதாரணம், அது போலவே மனிதனும், கருவாட்டைப் போல் இருக்க வேண்டுமானால், அதில் யாதொரு மகத்துவமுமில்லை,

நமது ஈரோடு நிருபர், கல்லிலுள்ள தேரைக்கும், பழத்திலுள்ள புழுவுக்கும் வேண்டிய உணவை கடவுள் அளிப்பதாக எண்ணுகின்றார் போலும்! ஆனால் நமது நிருபருக்கு எந்தக்கடவுள் அன்றுடம் வேண்டிய உணவை கொடுக்கின்றார் என்று கேட்கின்றேரும். விளையும் உணவை வண்டு வருவது பிரத்தியட்சம். அதற்கு மேல் கடவுள, நமது உணவை அளிக்கின்றார் என்பது. கற்பிதம் அதுபோலவே தேரைக்கும் வண்டுக்கும் அவை வசிக்கும் இடங்களில் கிடைக்கக் கூடிய காற்று ஜலம், அழுக்கு, சிறு கிருமிகள், முதலிய உணவால் சீவிக்கின்றன. அதற்கு கடவுளொருவர் ஏன் வேண்டுமென்பது விளங்க வில்லை! நமது நிருபருக்கும், தேரைக்கும், தவளைக்கும் புல் பூண்டுகளுக்கும், வேண்டிய உணவை அளிக்க, கடவுள் ஒருவர் வேண்டுமென்பது அனுவசியம்.

சுருங்க உரைக்கில், கற்பாறைகளில் பிளவுகள் (Cracks) இருக்கின்றன. பிளவுகள் மூலமாக மழைத் தண்ணீரில் கிடக்கும் தவளை, அல்லது, தேரை முட்டைகள், கல் போரையின் மூலமாகக் கொண்டு போகப்பட்டு போரைக்குள் வளர்கின்றன. தவளை வழவழப்பான பிராணியாதலால், ஈரமிருந்தால் போதும் தேரை கற்குள் அசைவற்றிருக்கிற படியால், வேண்டிய உணவு சொற்பம்.காற்றும் வெளிச்சமும் இருந்தால் எந்த உயிரும் வேண்டிய நேரம் மற்ற உணவின்றி சீவிக்கலாம்.இது தான் "கல்லுக்குள் இருக்கும் தேரை"யின் வாழ்கையின் சரித்திரம் வேண்டுமானால் சிறு தவளையை சிறு பெட்டியில் போட்டு, காற்றுக்கும், ஈரத்திற்கும் சிறு துவாரத்தை விட்டுப் பார்த்து, எந்த ஈசன் அதற்கு உணவு அளிக்கின்றான் என்பதைத் தெரிந்து தெரிவிக்குமாறு நமது அன்புமிகுந்த நிருபரை, வேண்டிக் கொள்கின்றோம்.

வேண்டுமானால் காற்று, கரணம், ஜலம் நுழைய வழியில்லாது பெட்டி. ஒன்றில் (Hermetically closed Box) ஒரு தவளையை இரண்டொரு நாள் மூடி வைத்து பிறகு அதை உயிருடன் பார்வதி பரமசிவன் வைத்திருக்கின்றார்களா என்று தெரிந்து நமக்கு தெரிவிக்கவாவது கேட்டுக் கொள்கின்றோம்."

குறிப்பு:—அடுத்தவாரம் திரு. சிங்காரவேலு அவர்களை நாகப்பட்டினம் நிருபர் ஒருவர் "சூன்யம் உண்மையா? அல்லது மருளா?" என்று கேட்டிருக்கும் வினவிற்கு அளித்த விடை வெளிவரும் வரும்.

பெற்றோர்களே! கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்குகுலைக் கட்டி- வாயிற்றுக்கட்டி- என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து தெரியுமா? பிரசித்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்மி வியாசராவ் அவர்களிடமும்

(விஜயநகரம் B. N. Ry.)

M. கல்யாணசுந்திரம்,

74 பட்டமங்கல தெரு மாயவரம்.

ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

குடி அரசு.

ஈரோடு 1932 மார்ச்சுமீ 20-உ

வாக்குரிமை.

—:o:

சுதந்தரம் பெற்ற ஒரு தேசத்தின் அரசாங்கம் நன்முய் டைபெறுவதற்கு முதன்மையான காரணமாயிருப்பவர்கள் வாக்காளர்களே யாவார்கள். உள்நாட்டுக்கலகங்கள் ஒன்றும் இல்லாமலும், வெளிநாடுகளுடன் சண்டைச் சச்சரவுகளில்லாமலும் நடைபெறுவதாக மாத்திரம் இருக்கின்ற அரசியலே நல்ல அரசியல் என்று கூறிவிட முடியாது. நியாயமாக ஆளுகின்ற அரசாங்கத்தாலும் அமைதியோடு ஆட்சி புரியமுடியும். கொடுங்கோலாட்சி புரிகின்ற அரசாங்கத்தாலும் அமைதியோடு ஆளமுடியும். கொடுங்கோல் அரசாங்கம் பணக்காரர்களையாதரித்து அவர்களுக்குப்பட்டம் பதவிகளையளித்து ஏழை மக்களையடக்கியாண்டால் நாட்டில் எந்தக் கலகமும் உண்டாகாமல் தடுக்க முடியும். ஆதலால் நல்ல அரசாங்கமென்பது ஏழை பணக்காரர் என்ற வேறுபாடில்லாமல் எல்லா மக்களும் சமசுதந்தர முடையவர்களாக வாழும்படியும், தேசத்தில் உள்ள வறுமை, பிணி முதலியவைகளைப் போக்கியும் நன்மை செய்கின்ற அரசாங்கமேயாகும்.

இம்மாதிரியான நல்ல அரசாங்கம் என்பது ஒன்று நடைபெற வேண்டுமானால், அதன் நிர்வாகிகள் சதமர்ம நோக்க முடையவர்களாகவும், காலதேச வர்த்தமானங்களை அறிந்து ஆட்சி புரியக்கூடியவர்களாகவும், மாறுதலுறுதியான, நன்மையான கொள்கையுடையவர்களாகவும், எவ்வளவு கஷ்டமான காலத்திலும் மனத்தளர்ச்சியும், அச்சமும் இல்லாமல் தமது பொறுப்பையுணர்ந்து நடக்கின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய சமதர்ம நோக்கமுடையவர்களை அரசாங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுப்பது வாக்காளர்களின் கடமையாகும். ஆகையால் தான் நல்ல அரசாங்கம் ஏற்படுவது வாக்காளர்களைப் பொறுத்த விஷயமாகும் என்று கூறினோம்.

ஆகவே ஒரு நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன்பே அந்நாட்டில் உள்ளவாக்காளர்களுக்கு அரசியல் விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் வாக்கின் பெருமையை உணரமுடியும். வாக்காளர்கள் தங்கள் வாக்கை அலட்சியமாகக்கருதக்கூடாது. அதனுடைய உண்மையான பெருமையை உணர்ந்திருத்தல் வேண்டும். இத்தகைய அறிவு பெற்ற வாக்காளர்கள்தான் மேற்கூறிய சிறந்த நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர்களாயிருப்பார்கள்.

மேல்நாடுகளில், சுதந்தரம் பெற்ற நாடுகளில் உள்ள வாக்காளர்கள் தங்கள் வாக்கின் பெருமையை உணர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு அரசியலின் பெருமையும், அதனால் உண்டாகும் பலா பலன்களும் தெரியும். ஆகையால் அவர்கள் அரசியல் கட்சிகளின் கொள்கைகளையறிந்து, தங்களுக்குப் பிடித்த கொள்கைகளையுடைய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே பெரும்பாலும் வாக்களிக்கின்றனர்.

ஆனால் தற்சமயம் நமது நாட்டில் சிறுபான்மையோராக இருக்கின்ற வாக்காளர்களில் பெரும்பாலான மக்கள் இன்னும் தங்கள் வாக்கின் மதிப்பை உணர்ந்து கொள்ளவில்லை யென்றே கூறலாம். நகரசபைத் தேர்தல் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் வாக்கின் மதிப்பு 5 ரூபாய்க்கு மேற்பட்டதென்றும், தாலுகா போர்டுத்தேர்தல் வாக்காளர்கள் தங்கள் வாக்கின் மதிப்பு 1 ரூபாய்க்கு மேற்பட்டதென்றும், சட்டசபைத் தேர்தல் வாக்காளர்கள் தங்கள் வாக்கின் மதிப்பு 8 அணாவுக்கு மேற்பட்டதென்றும் உணர்ந்து கொண்டிருக்கின்றார்களே யொழிய வேறு வகையில் அதன் உண்மையான மதிப்பை உணரவில்லை. ஜில்லா போர்டுத் தேர்தல் வாக்காளர்கள் தங்கள் வாக்கை எவ்வளவு மதிப்புள்ளதாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதை இனிமேல் தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு வாக்காளர்கள் தவறான உணர்ச்சியுடையவர்களாயிருப்பதற்குக்காரணம் நமது நாட்டு அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களுமேயாவார்கள் வாக்காளர்களை அற்பவுடையவர்களாகச் செய்யவேண்டியது அரசியல் கட்சிகளுடையவும், அவைகளின் தலைவர்களுடையவும் கடமையேயாகும். ஆனால் நமது நாட்டு அரசியல் கட்சிகள் யாவும் இதுவரையிலும் தமது உறுப்பினர்களுக்குத் தேசியத்தின் பெயரால் பட்டம்பதவி உத்தியோகம் செல்வாக்கு முதலியவைகளைத் தேடிக்கொடுப்பதில் முதன்மையான கவனத்தைச் செலுத்தி வந்து கொண்டிருக்கின்றனவேயொழிய வாக்காளர்களைச் சீர்திருத்துவதில் எந்தக் கட்சியும் கவனஞ் செலுத்தவேயில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமேயாகும்.

நாகரீகம் பெற்ற மேல்நாடுகளில், தேர்தல் காலங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் ஒவ்வொரு தொகுதியிலும் தங்கள் அபேட்சகரை நிறுத்துகின்றனர். ஒரு கட்சியின் கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றுகின்ற வாக்காளரும், அக்கொள்கைகளில் ஆட்சேபமற்ற நம்பிக்கையும் உள்ளவர்களுமே கட்சியின் பேரால் அபேட்சகராக முன்வருகின்றனர். அவர்கள் தங்கள் கட்சியின் நோக்கங்களையும், திட்டங்களையும் வாக்காளர்களுக்குப் பிரசங்கங்களின் மூலமாகவும், துண்டு விளம்பரங்களின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும், பலவகையாக எடுத்துக்கூறி வாக்குக்கொடுக்கும்படி பிரசாரம் பண்ணுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு கட்சிக்காரர்களும் தங்களுடைய நோக்கங்களையும், திட்டங்களையும் எடுத்துரைப்பதனால் வாக்காளர்கள் எந்தக்கட்சியின் கொள்கைதங்களுக்கு நன்மை யளிக்கக்கூடியது என்று தீர்மானிக்க முடிகிறது. அபேட்சகர்களும், தங்கள்கட்சிகளின் நோக்கங்களையும், திட்டங்களையும் பிரசாரம் பண்ணும்வகையிலேயே பொருளைச்செலவுசெய்கின்றனர். தேர்தலில் செலவாகின்றபணம் இவ்வகையில் செலவாகின்றதே யொழிய நமதுநாட்டைப்போல வாக்காளர்களுக்கு "லஞ்சம்" கொடுக்கும் வகையில் ஒருகாசுகூடச்செல வழிவதில்லை.

ஆனால் நமது நாட்டு வாக்காளர்களுக்கோ எந்த அரசியல்கட்சிகளின் உண்மையான கொள்கைகளைப்பற்றியும் தெரியாது. அவர்கள் தங்கள் விருப்படி வாக்களிக்க முடியாத நிலைமையில் கூடஇருக்கின்றனர் என்று கூறுவதும்தவறாகாது. ஒவ்வொரு ஏழைவாக்காளர்களும், தங்களுக்கு மேலாகஇருக்கின்ற பணக்காரர்களின் செல்வாக்கிற்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்பட்டவர்களாகவேயிருக்கின்றனர். தேர்தலில்அபேட்சகராக முன்வருகின்றவர்களும் பணக்காரர்களாகவே யிருக்கின்றனர். அவர்கள்தங்கள்சொந்தகௌரவம், பட்டம், பதவிகளின்செல்வாக்கைக் கூறிப்பணத்தைச்செலவிட்டு வாக்குப்பெறுகிறார்களேயொழிய வேறுவழியில் தாங்கள் கொள்கைகளை வாக்காளர்களிடம் எடுத்துக்கூறி அதன் மூலம் வாக்குப்பெற முன்வருவதில்லை. அபேட்சகர்கள் பெரும்பாலும் வாக்காளர்களிடம் தாங்கள் இன்ன கட்சியைச் சேர்ந்தவர்களென்று கூடத்தெரிவித்துக் கொள்வதே கிடையாது.

பணக்கார அபேட்சகர்கள், தாங்கள் வீட்டிலிருந்தபடியே தங்கள் ஏஜண்டுகளைவாக்குக்கொடுக்கும் இடங்களுக்கு அனுப்பிப் பணத்தினாலும், தங்கள்பெயருக்குள்ள செல்வாக்கினாலும் வாக்குப்பெற்று வெற்றியடைகின்றனர். இதுதான் நமது நாட்டில் தேர்தல் நாடகமாகஇருந்துவருகிறது.

பொதுவாக மேல்நாடுகளில், கட்சியின்பெயரால் ஒருதலைவனுக்குச்செல்வாக்கும், வெற்றியும் ஏற்படுகின்றது. ஆகவே கட்சிதான் அங்குதலைவர்களையும், தேர்தல் அபேட்சகர்களையும் சிருஷ்டிக்கின்றது. நமது நாட்டிலோ ஒருதலைவன் பேரினாலேயே ஒரு கட்சிக்குச் செல்வாக்கு ஏற்படுகின்றது. தலைவர்கள் தான் கட்சிகளைச்சிருஷ்டிக்கிறவர்களாக இருக்கின்றார்கள். இம்முறைமாறி ஒரு கொள்கையைப் பொறுத்து மதிப்பும், இழிவும் ஏற்படக்கூடியநிலை வரவேண்டும்.

உதாரணமாக இன்று காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு முன்வருகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம் அப்பொழுது அவர்கள் வாக்காளர்களுக்கு எதைக் கூறுவார்கள். "காந்திக்கு ஜே! மகாத்மாவுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று பிரசாரம் பண்ணுவதைத் தவிர வேறு ஒன்றையும் சொல்ல மாட்டார்கள். இதற்கு முன் காங்கிரஸ்காரர்கள் அபேட்சகர்களாக முன் வந்த காலங்களில் இவ்வாறு பிரசாரம் பண்ணித்தான், பணத்தையும் செலவு செய்து ஓட்டு வாங்கினார்கள் என்பது நமக்குத் தெரியாத செய்தி அல்ல. ஆகையால் இந்த முறை மாறுவதற்கு வழியென்ன என்பதைப்பற்றிச் சிறிது ஆலோசிப்போம்.

ஓட்டர்களின் தொகை குறைந்திருப்பது தான் இத்தகைய ஊழல்கள் ஏறபடுவதற்கே காரணமாகுமென்றே நாம் நினைக்கின்றோம். ஒரு ஜில்லாவில 60 ஆயிரம் வாக்காளர்கள் இருப்பார்களாயின், அவர்களில் அநேகமாக

30 ஆயிரம் வாக்காளர்களுக்கும் குறைந்தவர்கள் தான் தங்கள் வாக்கை உபயோகப்படுத்த முன் வருவார்கள். ஆகவே 25 ஆயிரம் வாக்குகளைப் பெறுகின்ற ஒருவன் தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவான். ஒரு வாக்குக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்கு வைத்துக் கொண்டாலும், 25 ஆயிரம் ரூபாய் போதுமானதாகும். மேற் கொண்ட செலவுக்கு ஒரு 5 ஆயிரம் வைத்துக் கொண்டாலும் 30 ஆயிரம் செலவு செய்கின்ற ஒருவன் சந்தேகமில்லாமல் தேர்தலில் வெற்றி பெற முடியும். ஒரு பணக்காரன் சட்ட சபைத் தேர்தலில் 30 ஆயிரம் செலவு செய்வது ஒரு பெரிய காரியமல்ல. இவ்வாறு செலவு செய்து தான் இப்பொழுது பெரும்பாலான பணக்காரர்கள் தேர்தலில் வெற்றி பெற்று வருகின்றனர்,

ஆகையினால் வாக்காளர்களின் தொகை ஒரு ஜில்லாவுக்கு 50 ஆயிரம் 60 ஆயிரம் என்றுகுறைந்த தொகையில் இல்லமல், இரண்டு லட்சம் மூன்று லட்சம் என லட்சக்கணக்கிலாகி விட்டால் அனேகமாகப் பணங் கொடுத்து ஓட்டு வாங்கலாம் என்ற தைரியம் பணக்காரர்களிடத்திலிருந்து ஓழிந்து போய் விடும். லெட்சக்கணக்காகத் தேர்தலில் செலவு செய்ய முன் வரவும் மாட்டார்கள். அப்படிச் செலவு செய்ய முன்வந்தாலும், எத்தனை தேர்தலில் இவர்களால் போட்டிபோட முடியும்? போட்டிபோடுவார்களானால் இரண்டொரு தேர்தல்களுக்குள்ளேயே அவர்களுடைய பணத்திமிர் ஓழிந்து மூலையில் உட்கார்ந்து விடுவார்களென்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் சட்டசபை ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாக முன்வருகின்றவர்கள், தங்கள் நோக்கங்களையும், சட்டசபையில் போய் தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் வேலைத் திட்டங்களையும் வாக்காளர்களிடம் சொல்லிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் வந்து விடும். வாக்காளர்களும், அபேட்சகர்களின் சொந்த விதாகுதிகளைக்கவனிக்காமல், அவர்களுடைய நோக்கங்களையும். கொள்கைகளையும் உணர்ந்து—வாக்குக் கொடுக்கக்கூடிய நிலைக்கு வந்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இவ்வாறு வாக்காளர்கள் அதிகப்படுத்தும் விஷயத்தில் நமது நாட்டினர் எந்த வகையான எண்ணத்தைக்கொண்டிருக்கின்றனர் என்பதை, இப் பொழுது வாக்குரிமைபற்றி விசாரணை செய்துகொண்டிருக்கும், திரு. லோதியன் கமிட்டி முன் நமது நாட்டுப் பொது ஜனப்பிரதிநிதிகளில் பலர் கொடுத்த சாட்சியங்களைக்கொண்டு ஒருவாறு யூகித்து உணரலாம்.

சில பிரமுகர்கள் ஜனத்தொகையில் நூற்றுக்குப் பத்து வீதம் வாக்காளர்களை அதிகரிப்பது போதுமென்றும், சிலர், 20 வீதம் அதிகரிப்பது போதுமென்றும், சிலர் 25 வீதம் அதிகரிப்பது போதுமென்றும், சிலர் முப்பது வீதம் அதிகரிப்பது போதுமென்றும், கூறிவருகின்றனர். ஒரு சிலரே வயதுவந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை யளிக்கவேண்டு மென்றும் கூறி வருகின்றனர். காங்கிரஸ்காரர்களும் இந்த அபிப்பிராயத்தையேகொண்டிருக்கின்றனர். சமீபத்தில் கூடிய ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டத்திலும் இதை ஆதரித்து முடிவுசெய்திருக்கின்றனர்.

இன்னும் சிலர், சொத்துரிமையின்மீது வாக்குரிமை கொடுக்கவேண்டுமென்றும், ஆங்கிலப்படிப்பின் மீது வாக்குரிமை வழங்கவேண்டுமென்றும், எந்தப்பாஷையை யேனும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையின்மேல் வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்றும் கூறிவருகின்றனர். இவைகளெல்லாம் வாக்காளர்களின் தொகையைக் குறைப்பதற்குக் கூறும் யோசனையேயன்றி வேறுகாது.

ஒரு தேசத்தின் அரசாங்கத்தினால் வரும் நன்மை தீமைகள், அந்த நாட்டில் உள்ள ஏழைகள், பணக்காரர்கள், முதலாளிகள், தொழிலாளிகள், ஆண்கள், பெண்கள், படிப்புள்ளவர்கள் படிப்பில்லாதவர்கள் ஆகிய எல்லா மக்களும் அனுபவிக்கக் கூடியவர்களாகவேயிருக்கின்றார்கள். ஆகையினால் அரசியல் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எல்லாமக்களுக்கும் இருக்கவேண்டியதே நியாயமாகும்.

வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமையளிக்கப்பட்டுவிட்டால்கூடியவரையிலும் மக்களின் சமதர்மத்திற்குப் பாடுபடக்கூடியவர்களும் அரசியல் நிர்வாகத்தில் நிறமையுடையவர்களும், சட்டசபைகளுக்கும் மற்ற பொதுஸ்தாபனங்களுக்கும் தெரிந்தெடுக்கப்படமுடியும் என்றே நாம் நினைக்கிறோம். ஏனென்றால் பணக்காரர்கள் லட்சக்கணக்கான வாக்காளர்களைப் பணத்தினால் வசப்படுத்தவோ, அல்லது அதிகாரத்தினாலும், செல்வாக்கினாலும் பயமுறுத்தவோ முடியாது.

எந்த அபேட்சகர்களும் தங்கள் நோக்கங்களையும் வேலைத்திட்டங்களையும் வாக்காளர்களிடம் கூறித்தான் ஆகவேண்டும். கல்வியறிவில்லாத வாக்காளர்களும் ஒவ்வொரு அபேட்சகர்களின் கட்சிக்கொள்கைகளையும் திட்டங்களையும் அறிந்துகொள்ளுவது கஷ்டமானகாரியமல்ல. இவ்விஷயத்தைப்பற்றி சென்னையில் ஆகாயவசனி மூலம் பிரசங்கம் செய்த திரு. லோதியன் அவர்கள் கூறிய அபிப்பிராயம் கவனிக்கத்தக்கதான்றுகும். 'கல்வியில்லாத காரணத்தால் ஒருவரை அறிவு, நிறமைகள் இல்லாதவர்கள் என்று சொல்லிவிடமுடியாது கல்விகற்றவர்களைக்காட்டிலும் கல்விஅறிவில்லாதகற்றவர்களில்பலர் உலகவிஷயங்களில்தேர்ச்சியடைந்தவர்களாயிருக்கக்காணலாம். ஆதலால் கல்வியறிவில்லாதவர்களுக்கும் ஆகாசவசனிகள் போன்ற சாதனங்களின்மூலம் அவர்களுடைதாய் பாஷைகளில் அரசியல் விஷயங்களைக்கூறி அவர்களை அரசியல் அறிவுடையவர்களாக்கலாம்.' என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்,

ஆகையால் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளிப்பதன் மூலம் தான், நமது நாட்டு ஓட்டர்களைச் சிறிதளவாவது தங்கள் வாக்கின் மதிப்பை உணரச்செய்ய முடியுமென்றும், லஞ்சங் கொடுத்தோ, பயமுறுத்தியோ ஓட்டு வாங்கும் முறையை ஓழிக்க முடியுமென்றும், சமதர்மத்திற்குப் பாடுபடும் உண்மையான உழைப்பாளர்கள் சிலராவது தேர்தலில் வெற்றி பெறமுடியுமென்றும் நாம் கருதுகின்றோம்,

---

கிளைக் கூட்டமா? காங்கிரஸ் கூட்டமா?

காங்கிரஸ் காரர்கள், தங்களுடைய காரியங்களுக்கு இப்பொழுது ஜனக்கூட்டம் சேர்வதும் கஷ்டமாகி விட்டதை அறிந்து புதிய வழிகளைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. இன்று திரு. காந்தியவர்கள். தமது "ராம ராஜ்ய"ப் பேச்சையும், "பகவத்கீதை"ப் பிரபாவத்தையும் விட்டு விடுவாரானால் அவருக்கும் பொது ஜனங்களிடம் உள்ள மதிப்புக் குறைந்து போகும் என்பதில் ஐயமில்லை. பொது ஜனங்கள், தங்கள் கொண்டிருக்கும் மூட நம்பிக்கை காரணமாக "ராம ராஜ்யம்" "பகவத்கீதை" முதலிய வார்த்தைகளைக் கேட்டே ஏமாறுகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்ற 14-3-32-ல் காஞ்சியில் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி சுவாமி கிருஷ்ணானந்தரென்பவர் ஜவுளிக்கடை வீதியில் காங்கிரசின் பெயரால் கூட்டம் சேர்ப்பதற்கு ஒரு தந்திரம் செய்தார். இரு தெருக்கள் சந்திக்கும் ஒரு சந்ியில் உட்கார்ந்து கொண்டு "பகவத்கீதை" பாராயணம் பண்ண ஆரம்பித்தார். உடனே அதைக் கேட்க ஜனக்கூட்டம் சேரத் தொடங்கிற்று, பிறகு வழக்கம் போல் போலீஸார் வருவதும், கலகஞ் செய்வதும், கைது செய்வதும் ஆகிய காரியங்கள் நிறைவேறின.

இவ்வாறு காங்கிரஸ் கூட்டம் கூட்டுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று தான் நாம் கேட்கிறோம். சாதாரணமாக மருந்து விற்கின்றவன் ஒருவன் ஒரு சந்தியில் நின்று கொண்டு, தனது மருந்தைப் பற்றியும், அது தீர்க்கும் வியாதிகளைப் பற்றியும் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தால் அங்கும் வேடிக்கை பார்க்கத் திரளான ஜனங்கள் கூடி விடுகின்றனர். கழைக்கூத்தாடி ஒருவன் தனது கழைக் கோலை நட்டு வைத்து விட்டுத் தனது வாத்தியத்தை முழக்கத் தொடங்கினால் அங்கும் திரளான ஜனங்கள் கூடி விடுகின்றனர் செப்பிடு வித்தைக்காரன் ஒருவன் தனது கோணிப்பையை எடுத்து வைத்துக் கொண்டு தண்டு தளவாடங்களுடன் உட்கார்ந்து தனது சங்கதிகளை எடுத்து விடத் தொடங்கினால் அங்கும் திரளான ஜனங்கள் கூடிவிடுவார்கள். பாம்பாட்டி ஒருவன் தனது பாம்புப் பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு தன் மகிடியை ஊத ஆரம்பிப்பானாயின் அங்கும் எண்ணில்லாத மக்கள் கூடிவிடுகின்றார்கள்.

இந்த அற்பமான காரியங்களுக்கே இவ்வளவு ஜனங்கள் கூடுவார்களாயின், சாதாரணமாக, பொது ஜனங்கள், உண்மையானவையென்றும் கேட்டால், படித்தால், மோட்சமும் சகல சௌகரியமும் உண்டாகுமென்றும் நம்பிக் கொண்டிருக்கும் ராமாயண பாரத பாகவதம் முதலியவைகளையும், பகவத்கீதையையும் பாராயணம் பண்ணத் தொடங்கினால், மூட நம்பிக்கையையுடைய மக்கள் எவ்வளவு

சுயமரியாதை இயக்கமே சுதந்திரம் அளிக்கும்.

(கள்ளிக்கோட்டை, எம். எஸ். நாதன்.)

சென்ற 1920-21ம் ஆண்டுகளில் காங்கிரஸ் சுயராஜ்யத்திற்காக ஒற்றுழையாமையை ஆரம்பித்து தோல்வியடைந்த பின்தான் சுயமரியாதை இயக்கம் புறப்பட்டது. என்? புறப்பட்டதென்றால், ஒற்றுழையாமை தோற்றுப் போனதின் காரணத்தை உணர்ந்து அவ்வழியில் வேலை செய்வதற்காக வேயாகும். சாதிச்சண்டைகளையும், சமயக்கொடுமைகளையும், பெண்களின் அடிமைத்தனத்தையும், தீண்டாதாரின் துயரத்தையும் கண்டு காங்கிரஸ் நீலிக்கண்ணீர்விடும். வாய் ஓயாமல் பேசும். கைசலிக்க எழுதும் செயலாற்றுவதற்கு மாத்திரம் மணம் இடங்கொடுப்பதில்லை. ஏனென்றால் சுயராஜ்யம் வந்த பிறகு இக்கொடுமைகளையெல்லாம் சுலபமாக (சட்ட மூலமாக) சரிப்படித்தி விடலாமென்று பக்குவமாக பதில் சொல்லிவிடும். இதன் உண்மை யென்னவென்றால், பெண்களுக்கு உரிமை கொடுத்து விட்டால் அவர்கள் தம் இஷ்டம் போல் புருஷர்களைத்தெரிந்தெடுக்கப்புறப்பட்டு விடுவார்கள், பிரியமின்றேல் விவாகரத்து செய்து விடுவார்கள். புல்லாலும் புருஷன், கல்லாலும் கணவன் என்று சொல்லப்படும் தெய்வீக வழியை மறந்து விடுவார்களே யென்ற சுயநல எண்ணமும், தீண்டாதவன் முதல், சூத்திரன், சற்சூத்திரன் வரை படிப்படையாகவுள்ள கட்டுப்பாடுகளை உடைத்து எல்லோரும் சமத்துவத்திற்கு வந்து விடுவார்கள். வருணாசிரம தர்மம் என்பதைக்கட்டந்து எல்லாவற்றிற்கும் மேலான பிர்ம்ம குலமொன்றிருப்பதையும் மறந்து நாஸ்திகர்களாய் விட்டால் ஏகபோகமாக அனுபவிக்கக்கூடிய பிழைப்பில் மண் விழுந்து விடுமேயென்ற மனக்கோட்டையும் தூலுக்கனுக்கு இடங்கொடுத்தால் மடம் பிடுங்கிவிடுவான். இப்போதே எட்டுக்கோடி சனியன்களிருக்கிறார்களே இன்னமும் விட்டுக்கொடுத்தால், நாம் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியார்களையெல்லாம் முஸ்லீமாக்கி நம்மை நசுக்கிவிடுவார்களே, பிறகு முஸ்லீம் ராஜ்யமல்லவா போய் விடும், புராதன இந்து ராஜ்யம் அழிந்து விடுமேயென்ற பயமும் குடி கொண்டிருப்பதினாலேயே மேற் காட்டிய காரணங்களைச்செயலில் காட்ட பின் வாங்குகிறது. ஆனால் சுயமரியாதை இயக்கம் புறப்பட்டதும், பெண்களுக்கு விடுதலை அளித்து வருகிறது. மதத்தை மாய்த்துக்கொண்டு வருகிறது. சாதியை ஒழித்துக்கொண்டு போகிறது, தீண்டாமையை துரத்தியடித்துக்கொண்டிருக்கிறது. மூடப்பழக்க வழக்கங்களை மூட்டை கட்டுகிறது. மக்களுக்குத் தன்மதிப்பை இன்னதென சாற்றிக்கொண்டிருக்கிறது. இப்படி ஏழாண்டிற்குள் எத்தனையோ காரியங்களை எதற்கும்அஞ்சாமல் செயலில் காண்பித்து விட்டது. இத்துடன் நின்றதா இல்லை, இல்லை. சுயமரியாதையின் இறைச்சல் இந்திய மக்களை விழிப்படையச் செய்து விட்டது. 'எங்கும்சுதந்திரமென்பதே பேச்சு, நாம் எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு,' என்ற காலஞ்சென்ற பாரதியாரின் பறிந்த கொள்கையைச் சுயமரியாதை இயக்கம் இந்தியா முழுவதும் பறையடித்து விட்டது. இவ்வோசையைக் கேட்டு காங்கிரஸ் பிரமித்து விட்டது.ஐயோ! அரை நூற்றாண்டுகளாக ஜீவித்திருக்கும். இந்தப் புதிய அலை வந்து அமுக்கிவிடும்போலிருக்கிறதே யென்று எங்கினது. இருந்தாலும் தனது நயவஞ்சக வலைஇருக்கிறதே. அதைக் கையிலெடுத்துக்கொண்டு மாறுவேடம் பூண்டு மக்களைத் தன்வசப்படுத்துவான்வேண்டி, பகீரத பிரயத்தனம் செய்து சுயமரியாதை இயக்கம் பிற்போக்கானதென்றும், வகுப்புவாத சுயநல இயக்கமென்றும், நாஸ்திக இயக்கமென்றும், சொன்னதோடு சுயமரியாதைக்கொள்கைகள், காங்கிரசிலேயே இருக்கிறதென்றும், அதை சுயராஜ்யம பெற்றபின்தான் சாதித்துக் கொள்ளமுடியுமென்றும் பிரசாரம்செய்து சென்ற ஆண்டில் மறுபடியும் பூரண சுயராஜ்யத்திற்கெனப் புறப்பட்டு உப்புக்காய்ச்சினது. கள்ளுக்கடை, ஜவுளிக் கடைகளில் மறியல் செய்த மகாத்மாக்கள், மாளவியாக்கள், நேருக்கள் போசுக்கள், ஆசாரிகள், மூர்த்திகள். அவர்களின் கூலிகளையெல்லாம் ஜெயிலுக்கனுப்பி மக்களை மயக்கினது. அப்போதும், சுயமரியாதை சும்மாவிருந்ததில்லை இதெல்லாம் மாயை, தேர்தல் தந்திரமே தவிரவேறில்லை யென்று விளக்கமாகச்சொல்லிற்று. அது உண்மையாகவே முடிந்தது. பிறகு காங்கிரஸ் சர்க்காருடன் ராஜிபேசிக்கொண்டு வட்டமேஜைக்குச் சென்று நான்தான் இந்தியாவின் ஏகப் புரதிநிதியென்றது. சுயமரியாதைவீரிட்டெழுந்து, இதெல்லாம், இந்திரஜாலம், காங்கிரஸ் எம் பிரதிநிதியல்லவென்று உறக்கக் கூவிற்று. காங்கிரஸ் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு திரும்ப சேர்ந்து விட்டது.

பாருங்கள் சுயமரியாதை வந்திராவிட்டால் காங்கிரஸ் தனது மாயாஜால வலையில் நம்மை சிக்கவைத்து தனது வைதிக ராஜ்யத்தில் நிறைவேற்றப்படும். மனு (அ) தர்மம் சட்டத்தின் கீழ் வாழ நேரிட்டிருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! சுயராஜ்யம் பெற்றால்தான் சுயமரியாதை பெற முடியுமென்று சொல்லும் சூட்சி என்ன? அதிகாரம் வருவதற்கு முன் விட்டுக்கொடுக்க முடியாத ஓர் காரியத்தை அதிகாரம்வந்தபிறகு கொடுப்போமென்று சொல்லுவதை எப்படி நம்ப முடியும். யென்றுதான் நாம்சொல்லுகிறோம். இதைக்கூலிக்கு மாரடிக்கும் நமது நண்பர்கள் உணர்வதே இல்லை. உணர்ந்தாலும் பிழைப்பும் பெயரும் போய்விடுமே யென்ற பயத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், சைவர்களும் நாஸ்திகர்களும், வாழும், இந்த நாட்டில் எப்படி வைதிக ராஜ்யம், ஸ்தாபிக்க முடியுமென்று நொண்டிச் சமாதானம் சொல்லுகிறார்கள். இதையும் நாம் முழுப்பித்தலாட்டமென்றேசொல்ல வேண்டியிருக்கிறது. எனெனில் உதாரணமாக இப்போது காங்கிரசில் எல்லா வகுப்பார்களிலும் சிலர் வேலைசெய்து வருவது போல் நாளை காங்கிரஸ் கோரும்சுயராஜ்யத்தில்அமுல் நடத்த விருக்கும் மனு (அ) தர்ம சாஸ்திரத்தில், குரான்ஷரிப் அடங்கியிருக்கிறதென்று தேசிய முஸ்லீம்களும, பைபில் அடங்கியிருக்கிறதென்று தேசியக்கிறிஸ்தவர்களும், திருக்குறள் பொதிந்து கிடக்கிறதென்று சைவர்களும், சமதர்மம் ததும்புகிறதென்று தேசிய சுயமரியாதைக்காரர்களென்பவர்களும் தத்துவார்த்தம் செய்து மக்களை ஏமாற்ற முடியுமா? முடியாதா வென்பதை மெள்ள ஆலோசித்தால் விளங்காமல் போகாது. நாட்டின் முற்போக்கைக்கோரும் காங்கிரசாகயிருந்தால் மத நடுநிலைமை வகிக்குமா? ராஜாக்களுக்கும், பணக்காரர்களுக்கும் மதப்பிராந்தர்களுக்கும் பாதுகாப்பளிக்கும் தேசிய சர்க்காரின் கீழ் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்திருக்கும் ஏழைகளும், தாழ்ந்த மக்களும் என்ன பலனை பெற முடியும்? செருப்புத்தைப்பவன் முதல், விவசாயம் செய்பவன் வரையிலுள்ள எல்லா ஏழை வகுப்பினர்களும் அவர்களுடைய வருணாசிரம தருமப்படி வேலை செய்து ஜீவனம் நடாத்துவது தான் புண்ணிய மென்றும் பம்பாய் முதலாளிகளைப் போல் ஆகவோ சிம்லா பார்ப்பனர்களைப் போல் ஆகவோ முயற்சிப்பது பாபமென்றும் சொல்லி ஏழைகளின் கண்ணில் மண்ணை வாரிப் போட்டு இது தான் மோட்சத்திற்கு வழியென்று ஆசீர்வாதம் செய்யும் காங்கிரசின் கீழ் வாழ்வதை விட, எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும், சம அந்தஸ்தும் கொடுத்து தக்க பாதுகாப்பளிக்கும் அன்னிய ஆட்சியின் கீழ் வாழ்வது எவ்வளவோ மேலான தென்றும், சுயமரியாதையுடைய வாழ்வென்றும் சொல்லுவோம். இதற்காக நம்மை தேசத்துரோகிகளென்று சொன்னாலும் அதை லட்சியம் செய்யோம். மதப் புரட்டுகளை வெளியாக்கும் போது நம்மை நாஸ்திகர்களென்று அழைப்பதை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறோமோ அது போலவே தேசிய புரட்டுகளை வெளியாக்கும் போது தேசத்துரோகிகளென்று சொல்லுவதையும் மனமார ஏற்றுக் கொள்ளுகிறோம். ஏனெனில் தெய்வ பக்தனும், தேச பக்தனுகமிருந்து திருடிக் கொண்டிருப்பதை விட, நாஸ்திகனும், தேசத்துரோகியாகவு மிருந்து மானத்துடன் வாழ்வோம் ஆகவே நம்து நன்மையை கோரி, சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தீவிரமாக வேலை செய்திருக்கிற தென்பதை சொல்ல வேண்டியதில்லை. இனியும் காங்கிரஸ் செய்யப் போகும் சண்டித்தனங்களையும், பித்தலாட்டங்களையும் எதிர்த்து உண்மை சுதந்திரத்தை நிலை நாட்ட தயாராயிருக்கிறது. நமது இயக்கத் தாத்தாவும் மேல்நாடுகளின் நிலைமையை அறிந்து வர சென்றிருக்கிறார். நமது இயக்கம் மகத்தானதாக வருங்காலத்தில்மாறப் போகிறது. ஆதலால் சுயமரியாதையைப் பின் பற்றுக, சுயமரியாதையே சுதந்திர மளிக்கும்.

கண்டி மருத்துவர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 15—3—32 இரவு 8-மணிக்கு சங்கத் தலைவர் தலைமையில் கூடியது. சபை முன்னிலையில் தலைவர் காரியதரிசி பொக்கிஷதார், இவர்களுன் அறிக்கைகள் வாசிக்கப்பட்டது.

சில மருத்துவ அன்பர்கள் சமூக உரிமைகளைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் தெளிவாக விளக்கிப் பேசினர்கள். பின்னர் கூட்டம் 10-30 மணிக்கு இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கக் கூடுவார்கள் என்பதில் என்ன தடை?

ஆகையால் மக்கள் மயங்கத்தகுந்த இதுபோன்ற காரியங்களைச் செய்து, ஜனக் கூட்டத்தைச் சேர்த்து, அது அரசியல் கூட்டமென்றும், காங்கிரஸ் கூட்டமென்றும், சொல்லி ஏமாற்றுவதுதான் ஒழுங்கா என்று கேட்கின்றோம். இத்தகைய காரணங்களின் மூலம் பொது ஜனங்கள் காங்கிரசை ஆதரிப்பதாகவும்: அரசாங்கத்தை வெறுப்பதாகவும் விளம்பரம் பண்ணுவதனால் வெள்ளைக்காரர்களோ மற்றவர்களோ ஏமாந்து விடுவார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகையால்தான் பொது ஜனங்கள் ஏமாராமல் இருக்கவேண்டுமானால், அவர்களுடைய வீடாற்றத்திற்குத் காரணமான மூட நம்பிக்கையை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று நாம் கூறி வருகின்றோம்.

வாழ்த்துப்பாடல்.

திருச்சியில்நடந்த திரு இராமசாமி-திருமதிஇலகூமி யின் சீர்திருத்தத்திருமணத்தைப் பாராட்டி முத்துராம லிங்கபுரம் சுயமரியாதைப்பாவலர் திரு. தி. அ. வேங்கடசாமி அவர்களால் பாடிய வாழ்த்துப்பாடல்

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தங்கள்.

இருபத்தெட்-டொன்றுமுப்பத் திரண்டுமாலை
இயலுறும் ஐந்தரை மணிக்குத் திருச்சிதன்னில்
மருவுறுகீ ழாண்டார்வீ தியில்ஜே-எஸ்-ரா
மாநுஜம்-பி-ஏ-பி-எல்-தமநில்லத்தில்
தருஜில்லா சுயமரியாதைச்சங் கத்தா
தரவினில்உப் பிலியபுரம் தழைக்கும்தோன்றல்
திரு ராம சாமியிலக் குமியாமென்னத்
திகழ்மணமக் களுக்குபர் சீர்திருத்தப்பண்பில்

நேரோட்டம் தனிலுலகமோடா வண்ணம்
நிறுவுமதம் ஜாதியதி காரம்செல்வப்
பேரோட்டங் கொண்டுபா மரைரவாட்டிப்
பிழிந்து சுகம் துய்க்குமிகும் அகந்தைக்காரர்
ஓரோட்டமாயோடி யொழிப்பப்பேதை
யோர்களுணர்ந்துயவருபே ரறிஞன்எங்கள்
ஈரோட்டு வள்ளல் லவக்கம் வீரராமன்
இயக்குசய மரியாதை யியல்தப்பாதே.

சமதருமதத்துவத்தினுண்மைகண்ட
தண்ணளியோர் பெருங்குழாம் கூடிவாழ்த்த
அமளியுடன் நடந்திரு மணத்தைநாங்கள்
அறிந்தனம் ஆனந்தவெள்ளத் தடங்காவூற்றில்
கமழ்திருமஞ் சனமாடிக் களிப்புற்றேம் இக்
கடிமணம்போல நெடுமணம்கோடிக்கணக்காய்
நமர்களிடை நடந்துவிதவையர்துன்பங்கள்
நாசமுறரோசமுடன் உழைப்போம் நாமே. (3)

கிறிஸ்துவ வாலிப ஐக்கிய சங்கம்.

சாம்பியன் ரீப்சில் 10—2—32 தேதி சி சி. சாமி அவர்களால் ஷை சங்கத்தின் கொள்கையைப்பற்றி விவரித்துப் பின் ஷை சங்கத்திறகு சி. சி. சாமி அவர்களைத் தலைவராக வும், ஈ. சுப்பிரமணி அவர்களை உப தலைவராகவும், எ சி. ரதினசாமி யை வரவேற்புத் தலைவராகவும், ஏ. சி. சாலமோன் காரியதரிசியாகவும், எஸ். எஸ். பொன்னுசாமியை பொக் கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்ப ட்டு கூட்டம் முடிந்தது. மீண்டும் 17—2—32 புதன்கிழமை கூடியது. கூட்டத்திற்கு சி. சி. சாமி தலைமை வகித்தார். அப்பொழுது ஈ. எஸ். அவர்களால் சங்கத்தில் எல்லா சுயம ரியாதைப் பத்திரிக்கையும் ஆதரித்து வாசிக்க வேண்டுமென்று கூறியதை யாவரும் ஆமோதித்து தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசிஎழுதுகி றார்.

கோலார் பொதுக்கூட்டம்.

கோலார் தங்கவயல், உரிகம் டிரை வர் லென் ஆதி திராவிட சீர்திருத்த வாசக சாலையாரால் 3—3—32 சனி க்கிழமை இரவு 7-மணிக்குச் சோ லாபுரி அம்மன் ஆலயத்தில் திரு. முனிசாமி ஆண்டான் விவாகத்தை முன்னிட்டு ஒரு பொதுக கூட்டம் ஏடைபெற்றது. அக் கூட்டத்திற்கு உயர்திரு விஜயரங்கமவர்கள் தலைமை வகித்து தற்கால நாகரீகம், சீர்திருத் தம், கல்வி என்பதைப்பற்றி பேசிய பின் திரு. ஆர். கோவிந்தராஜு இல் வாழ்க்கை கதிமோட்சம் என்பதைப் பற்றிப் பேசியபின் ஆர், சுப்பிரமணி யம் சுயமரியாதைக் கொள்கையைப் பற்றி ஒரு மணிநேரம் பேசியமர்ந் தார். தலைவர் முடிவுரையில் மூட நா டகங்களைக் கண்டித்து கடவுள் வாழ் த்து என்னும் பல அரிய விஷயங் களைப்பற்றப் பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகி றார்.

திருகூர் ஒடுக்கப்பட்டவர் மகாநாடு

10-3-32 நாள் மாலை கோவையி லிருந்து தோழர்கள் எ. ஆர். சிவான ந்தம், கோவை சுயமரியாதை வாலி பர் சங்கத்தலைவர், என். கே. கஸ்தூரி, வி. சுப்பிரமணியம், வி. செபப்பன் னன், சி. கே. ஆறுமுகம், பி. இரங்க சாமி, ஆர். லோகநாதன், ஆர். கிஸன் ஆகியவர்கள் சிங்காநல்லூர் இரயில் வே ஸ்டேஷனில் வந்திறங்கியவு டனே மகாநாட்டு வரவேற்புக்கழக உறுப்பினர்களால் வரவேற்கப்பெ ற்று திருகூருக்கு அழைத்துச்செல் லப்பட்டார்கள். திருகூர் திராவிட முன்னேற்ற சங்கத்தின் எதிரில் உள்ள திடலில் மகாநாடு சரியாக 6-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் ஆண் களும் பெண்களுமாக சுமார் 1000 பேர் வந்திருந்தனர். தாழ்த்தப் பட்ட (1) மக்கள் மட்டுமல்லாமல் உயர் ஜாதி மக்களெனப்படுவோரும் கூட் டத்தில் கலந்து கொண்டது குறிப் பிடத் தக்கது

மகாநாட்டிற்கு உயர்திரு எ. ஆர். சிவானந்தர் அவர்களைத்தலைமைதாங் குப்படிஉபாத்தியாயர்கே.கஞ்சையா அ வர்களால் பிரேரேபிக்கப்பட்டு தோழர் கருப்பண்ணன் அவர்களால் ஆதரிக் கப் பட்டு பெருத்த கரகோஷத்திடை யே தலைவரவர்கள் ஸ்தானத்தமர்ந்த (2) பின் தோழர் என். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் மிக இனிமையாகப் பாடினர். பின் னர் வரவேற்புக் கழகத்தலைவர் தோ ழர் சி. நாராயணசாமி அவர்கள் வர வேற்புச் சொற்பொழிவில் கல்வி, தீண்டாமை அரசியல்குறைகள்முதலி யன பற்றி விரிவாகக்கூறினர்பின்னர் தலைவர் உயர்திரு சிவானந்தமவர்கள் தாழ்த்தப்பட்டோர் நிலை, பொதுத் தொகுதி தனித் தொகுதியின் உண் மை சுயராஜ்யம், கதர் முதலியன பற்றி நீண்ட சொற் பொழிவாற்றி னர்.

(அதன் முழு விபரம் அடுத்த வாரம் வரும்) பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டன.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. தாழ்த்தப்பட்ட மக்கள் முன் னேற்றத்துக்குத் தனித்தொகுதியே காலச்சிறப்புடைத்தென ஓர் கால் பெரிதும் போராடி வந்த ராவ்பகதூர் எம். சி. ராஜா அவர்கள் பதவி மோகத்தால் இன்று கூட்டுத் தொகு தியை யாதரிப்பதை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, அவ ரிடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நம் பிக்கை யில்லையென்றும் தீர்மானிக் கிறது.

2. ஒடுக்கப் பட்டவர்கள் முன் னேற்றத்துக்குத் தனித்தொகுதியே பெரிதும் வேண்டப்படுவதால் பட் டம், பதவி மோகங் கொண்ட ஒரு சில தலைவர் என்பவர்களின் கூச்ச லைப் பொருட்படுத்தாது தாழ்த்தப் பட்ட சமூகத்தினருக்கு தனித் தொகுதி கொடுத்து ஆதரிக்க வேண் டுமாய் அரசாங்கத்தாரை இம்மகா நாடு கேட்டுக் கொள்ளுகிறது.

3. தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலை க்குத் தனித்தொகுதியே தேவை யென்று லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் எவ்வித எதிர்ப்புக்கு மஞ்சாது தைர்யமாய்ப் போராடிய தலைவர்களாய் டாகடர் பி. ஆர். அம் பெட்கார், ராவ்பகதூர் சீனிவாசன் இவர்களை இக்கூட்டம் பாராட்டு கிறது.

4. பிறர் நலம் பேணும் பெரியா ராய உயர்திரு. சபாரெத்தினம் செட் டியார் அவர்கள் லால்குடி போர்டு ஹைஸ்கூலில் பயிலும் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உணவளிப்பதற் காக பத்தாயிரம் ரூபாய் தன்கொடை யாக மூலதனமளித்துதவியிருப்பதை இம்மகாநாடு பெரிதும் பாராட்டுவ தோடு அப்பெரியாரை மனமார வாழ்த்துகிறது.

இத்தீர்மானங்களை அரசாங்கத்தா ருக்கும், மற்றையோருக்கும் அனுப் பும்படி தலைவர் அவர்களை இம்மகா நாடு கேட்டுக் கொள்ளுகிறது.

தீர்மானங்களைப் பிரேரேபித்தும் ஆமோதித்தும் பேசிய தோழர்கள் தீர்மானங்களின் நோக்கங்களை ஆண் டுக் குழுமியிருந்த மக்கள் தெள்ளத் தெளிய உணரும் முறையில் பேசிய தும், ஒவ்வொரு தீர்மானம் அங்கீக ரிக்கப் படும் பொழுதும் தலைவர் அவர்கள் தமது ஆழ்ந்த அனுபவ மொழிகளால் அவைகளின் அவசி யத்தைப் பற்றி மிக அழகாக எடுத் தியம்பினர். தீர்மானங்கள் எல்லாம் ஏகமனதாய் நிறைவேறின.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல் !!
கண்ணில் பூவிழுந்து பார்வை யைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் நீக்கப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் காது வாசகனில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.
செவிடு !!
பாதி அல்லது முழுவதும் செ விடாயிருந்தால் கூடப் பரவா யில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத் தமாக நிவர்த்திக்கப்படும். குணத் திற்கு உத்திரவாதம்.
விடரங்களுக்கு இவ்விலாசத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.
"Sri" Works
Beadon St. P. O. Calcutta,

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே தம்தம் கடமை எனக் கொண்டு தம் அறிவை அவைகளுக் கடிமைப்படுத்துபவரும் அன்றி அவைகளின் உபயோகத்தை அறியாது கலைகளையும் ஆயிரங்காலத்து அனுபவ உண்மைகளையும் எள்ளி இகழும் அரிவிலாமாந்தருமே அத்தகைய ரொப்பர்.

தம்தம் பழக்கவழக்கங்களைச்சிந்தனையின்றிக்கைப்பற்றி யொழுகும் ஒழுக்கமுதிர்ச்சிபெரு மாந்தரிடத்தும் அன்றிசில சட்டங்களைமறந்தும் மாற்றுதற்கொணாத வேதாந்த உண்மைகளெனக்கொண்டுதாம் கருதிய கருமம் அவைகளோடு இணங்குகின்றதா என்று மட்டுமே பார்க்கிற மனிதரிடத்தும்கூட இத்தகைய பழக்க வழக்கங்களும் சட்டதிட்டங்களும் தாம் செயக்கருதுகிற சில குறிப்பிட்ட செயல்களை தள்ளவோ அல்லது தடுக்கவோ செய்கின்றனவேயன்றி ஏதாவதொரு குறிப்பிட்ட காரியத்தை செய்தே தீரவேண்டுமெனப் பணிப்பதில்லை. மனிதனுடைய செயல்களெல்லாம் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை இன்னோரன்ன நல்லொழுக்கங்கள்பற்றி இருக்கவேண்டுமென்று நம்மை பணிப்பதாகக்கருதலாம். ஆனால் எந்தக் குறிப்பிட்ட விதத்தில் அல்லது விதங்களில் நாம்நிந்த நல்லொழுக்கங்களை நடத்து காட்டவேண்டுமென்றவாறு செயல்களில் எல்லா அம்சங்களையும் பணிப்பதாக கருதுவதற்கில்லை, அதாவது பிறப்புத்தொட்டு இறக்கும் வரை உள்ள அவனது ஒவ்வொரு கடமைகளையும் அமைப்பதாக ஏற்படாது.

ஆனால் முற்றிலும் முதிர்ந்த ஒழுக்க ஆலோசனை எழுகின்ற மாந்தரிடத்தோ அல்லது ஆராய்ச்சிகளிலோ அதைச்செய்யாதே, இதைச்செய்யாதே என்று நம்மைத்தடுக்கக்கூடிய விதிகளின் பலமும் குன்றிக்குறைகின்றது. எனென்றால் அவைகள் நம்மை எப்பொழுதும் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையன என்று கருதுவதற்குப் பதிலாக அவைகளை மாற்ற அன்றித்திருத்தி அமைக்கவும் இடந்தரும் தன்மையுடையன என்று கருதுகிறோம். இருந்தபோதிலும் கூட அவைகள் நமக்கு மிகுந்த உபகாரம் செய்வனவாயும் தகுந்த வழிகாட்டிகளாகவுமிருக்கின்றன. ஒருவனுடைய தீர்மானித்த நடத்தை ஒழுக்கத்தால் நியாயமானது என்று ஏற்படவேண்டுமானால் அவன் எதைச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்குமுன் தான் முன் அங்கீகரித்திருக்கும் விழுமிய சில அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் கொண்டு சிந்திப்பவனாயிருக்கவேண்டும் என்று கூறியுள்ளோம். அத்தகைய நோக்கங்களும் விழுமிய கருத்துக்களும் ஒழுக்க ஆலோசனை என்னும் யாகம் செய்யும் ஒருவனுக்கு ஞாபகமென்னும் தீமூட்டிச்சிந்திக்கச்செய்வதற்கு நெய்யாகவும் காய்ந்த விறகுகளாகவும் அமைகின்றன.

[7-ம்பக்கத்தொடர்ச்சி]

தெய்வங்களாக வணங்கி வருகிறார்கள். பசுவுக்குப் புல்லிடுதலும், நீர் கொடுத்தலும், புண்ணியமெனக்கருதுகின்றார்கள். பசுவைப் பார்ப்பானுக்குத் தானம் பண்ணுவதலுலும், பசுவின் சாணி, மூத்திரம், பால், நெய், தயிர் இவைகளைக்கலந்து "பஞ்சகவ்வியம்" என்ற பெயருடன் சாப்பிடுவதலுல் புண்ணியம் எனநினைக்கிறார்கள். இதற்கெல்லாம் இந்துமத சாஸ்திரங்களே காரணமாகும்.

இவைமாத்திரமல்ல, இன்னும், பாம்பு, பன்றி, நாய், தேள், பருந்து, காக்கை முதலிய மிருகங்களையும் பறவைகளையும் இந்துக்கள் தெய்வங்களாக நினைத்து வணங்கி வருகின்றனர். இந்தக் காரணங்களையெல்லாம் பார்க்கும்போது இந்து மதத்தை யாராவது நாகரிகமான மதம் என்று கூறமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகவே எந்தச் சீர்திருத்தமும் பயன்படாதென்பதையும், இந்து மதம் என்ற பெயரையும், அதற்குறிய வேதங்களையும், சாஸ்திரங்களையும் ஒழித்தால் ஒழிய இந்துக்களின் மூட நம்பிக்கைகளைப் போக்கமுடியாதென்பதையும் கூறுகின்றோம். ஆனால் நாளடைவில், பகுத்தறிவு வளர வளர இந்து மதம் தானே ஒழிந்து போகும் என்பதற்கு, பசுவைப்பற்றி இந்துக்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தில் மாறுதல் ஏற்பட்டிருப்பதே போதிய சான்றாகுமென்றும் கூறி முடிக்கின்றோம்.

மதுரையில் சுயமரியாதைத் திருமணம்.

14—3—32ந்தேதி காலை 7 மணிக்கு இந்நகர் மால் வடம் போக்கித் தெரு 63 நெம்பர் இல்லத்தில் டாக்டர் திரு. எஸ். ஷ. தஸ்தகீர் அவர்கள் தலைமையில் திரு. முனியாண்டிக்கும் திருமதி வினைதீர்த்தம்மாளுக்கும் சடங்குகளற்ற முறையில் சுயமரியாதை விதிப்படி திருமணம்வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நகர் சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்களும் மற்றும் அபிமானிகளுமாக நூற்றுக்கணக்கான ஆண்களும்பெண்களும் வந்திருந்தார்கள். தலைவரவர்கள் மணமக்களுக்கு மலர் மாலைகளைக் கொடுத்து மாற்றச் சொல்லி விட்டு திரு. சிவ. நா. பெ. சி. தங்கமணி அவர்களை பேசுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

திரு. தங்கமணி அவர்கள் திருமணத்தை ஆதரித்து ஒரு அரிய சொற்பொழிவாற்றினர். பின்னர் திரு. ப. வ. விநாயக மூர்த்தி, அய்யாசாமி, ஏ. என், வெங்கிடசாமி, என். தாமஸ் எஸ், கே. குருசாமி, எம். எஸ், சுப்பிரமணியம் நாக பூஷணம் முதலியவர்கள் திருமணத்தை ஆதரித்துப் பேசியபின் தலைவர் முடிவுரையாக சில பேசினர். பின் ஒரு சமபந்தி போஜனம் நடைபெற்றபின் கூட்டம் கலைந்ததெனஒருநிருபர் எழுதுகிறார்.

பெரம்பூரில் சுயமரியாதைத் திருமணம்.

10—3—32ந்தேதி காலை 8-மணிக்கு சென்னை பெரம்பூர் சி. ஆர். சி. ஹைஸ்கூலுக்கு அடுத்த பங்களாவில் திரு. வரதராஜ பாகவதருக்கும், திருமதி லடசுமி தேவிக்கும் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பண்டித திருஞானசம்மந்தர் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. அதுசமயம் பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பின் பல அன்பர்கள் திருமணத்தை ஆதரித்துப் பேசினார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ராயரையனைழும் பாரதழும்
'நரியும் காக்கையும்'
போன்ற கட்டுக்கதைகளை.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மில். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்பேரின் கடவுள், மதம் என்பேரால்அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, நூதன கதைகள்.

அசல் விலை ரூ. 1 8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

மஞ்சள் ஆவாரம்பூ பானத் தூள்



உடலுக்கு நிறமும் ஆரோக்கியமும் தரும்.

C V பாண்டியா & கோ,

16-17 சகின் லேன் பீச்சு, மதராஸ்

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்

தீராதகர்மரோகமென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

தயிடோ

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொந்துவியாதிகளுக்கும் சரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சாத மீகத்தோதுக்கிணங்கி அனுபவித்தானந்தப்படுங்கள். நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்பிடன் எழுதுங்கள்

சி. ஒ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K R) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S. I.

"நானும், நான் கண்ட உண்மைகளும்"

[யானை வெடி]

அடேயப்பா! பொல்லாத உலகமிது!! "போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்" என்னும் பழமொழியைக் கேட்டிருப்பீர்களல்லவா இந்தப் பழமொழியை நண்பர்கள் என் விஷயத்திலும் அப்ளை செய்து விட்டார்கள். ஏதோ சில நாள் வேறு 'பிஸினசாகவிருந்து விட்டேன். (அப்ளை, பிசினஸ்) என்னும் வார்த்தைகளுக்கு அர்த்தம் தமிழில் விரும்பினால்! டீச்சர் யாரையாவது கேளுங்கள் அல்லது டிக்ஷனரியைப் பாருங்கள் ஒகோ வார்த்தைகளும் அன்னியர் பாஷையாகப் போய்விட்டதோ) கட்டுரை கொடுக்காததற்கே தூற்ற ஆரம்பித்து விட்டார்கள் என்றால் பழ மொழியிலுள்ளபடி பொருள்கொடாவிடிலோ.....! நான் சொல்லமாட்டேன்.

எனக்குச் சில கடிதங்கள் கிடைத்தன. ஒரு நண்பர், "யானை வெடியே! இன்னுமா புகைந்து கொண்டிருக்கிறாய்?" என்கிறார். அடுத்த ஒருவர் கடினமாக "அடுத்த வாரம்வெடிக்காவிடில் உன்னைஎடுத்துதுக்கித்தண்ணீரில் போட்டு விடுவேன். பிறகு வெடிக்க முடியாமல் குளத்திலேயே ஊறிப் போவாய்" என்கிறார். பிறகு ஒருவர் "யானை வெடியே! எங்கு உன்னைக் காணேம்! அணைந்து விட்டாயா? நான் வரட்டுமா நெருப்பு வைக்க" என்கிறார். மற்றொருவர் "முதல் வெடியுடன் மேலோகம் சென்றுவிட்டாயா? தரையில் தானே? என்று எழுதிவிட்டு, ஊர், போஸ்டாபீஸ் சரியாய் எழுதி, மிஸ்டர் யானை வெடி என்று பெயர் எழுதி விட்டார். இப்படி எழுதியபடியால் தபால்காரருக்கும், எனக்கும் கால் மணி நேரம் வேலை எற்பட்டு விட்டது. கடைசியில் அவரும் சிரித்தார் ஆனால் நான் சும்மாயிருப்பேனே?

முதலிலேயே நண்பர்களை ஒன்று கேட்டுக்கொள்ள மறந்துவிட்டேன். ஏதே ஒரு குற்றம் செய்து விட்டேன் குடி அரசு வாலிபன் கோபித்துக் கொண்டால் நான் சரிப்படுத்திக் கொள்கிறேன். நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. ஒகோ! குற்றத்தைச் சொல்லாமல் சமாதானம் சொல்கிறேன். ஆகையால் இதுவும் ஒரு குற்றந்தான். வேறொன்றுமில்லை. இதே தலைப்பிட்ட முதல் கட்டுரையில், கடைசியில் 'தொடரும்' என்று எழுத மறந்துவிட்டேன். ஆனால் தொடர்ச்சி எழுத மட்டும் ஞாபகம் வந்துவிட்டது.

ஒரு நாள், ஒரு நகரத்தில் மாலைப் பொழுதில் வாக்கிங் சென்றேன். ஓரிடத்தில் சைவ சித்தாந்த ஆண்டு விழா நடந்தது. மெதுவாக உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு சொற்பொழிவுகளைக் கேட்டேன். சொற்பொழிவுகளெல்லாம் எதைப்பற்றி என்பீர்களோ? விஞ்ஞான விருத்தியுமல்ல. சமூக முன்னேற்றத்திற்கானவைகளுமல்ல அல்லது அக்கூட்டத்தாரைப் பொருத்தமட்டிலாவது அவர்களுக்காவது நன்மை பயக்கக்கூடியதாயிருந்ததா? அதுவுமல்ல. ஒருவர் நரியெல்லாம் பரியான கதையைச் சொன்னார். ஒருவர், கடிதம் ஆற்றில் எதிர்த்துச் சென்ற கதையை எடுத்தார். ஒருவர் சைவமே! உலகெல்லாம் தழைத்தோங்குக!! என்றார் ஒருவர் இயற்பகை நாயனாரின் பெண்ஜாதியை அவரிடம் போய் யாசகம் கேட்டு பக்தரைச் சோதித்த அன்பே! அருளே!! என்று ஆனந்தக் கண்ணீர் வடித்து அடங்கினார்.

"மாமியாள் உடைத்தால் மண் சட்டி மருமகள் உடைத்தால் பொன் சட்டி" என்கிறபடி யாசகம் கேட்டது கடவுள் என்று கருதப் பட்ட படியால் பெண்சாதியைக் கேட்டது சோதனையாக முடிந்ததாம். வேறு யாராவது கேட்டிருந்தால்! அது என்னமோ. அக் காலத்தினர் போக்கு. ஆனால் இக் காலத்திலோ யாசகம் கேட்பவரும் (சிவனும்) கிடையாது. கொடுப்பதற்கு ஒருவரும் (இயற்கை நாயனாரும்) கிடையாது. இன்னுமொரு முக்கியமான உண்மை இருக்கிறது. இப்படி சொற்பொழிவுகள் நடக்கும்பொழுது மாலைப் பொழுது அதிகரித்துவிட்டது. லைட் போட ஆரம்பித்தார்கள். அதில் ஒருவர் பேபி பெட்ரொமாக்ஸ் லைட் ஒன்றை எடுத்துவந்து அங்கு அமர்ந்திருந்த தலைவருக்கு எதிரில் கட்ட வந்தார். அந்த லைட்டின் வெளிச்சமும், 'புஸ்' என்ற சத்தமும். தலைவருக்கு எம்படியிருந்ததோ! அல்லது அன்னியர் லைட் என்று நினைத்தாரோ!! தெரியவில்லை. எனய்யா? நம் நாட்டு அரிக்கன் லைட் 'இல்லையா' இதுதான் உங்களுக்குக் கிடைத்ததா என்றார். பாருங்கள்! அவருக்கு அந்த லைட்டின்மேல் வந்த வேகத்தை! அரிக்கன் லைட் நம் நாட்டினதாம்!! ஒரு பெரும் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் வயது சென்றவர், சுவாமிகள் பட்டம் பெற்றவர், சிறப்பு வேஷம் போட்ட இவர் இப்படிச் சொன்னால் எனக்கு ஏன் கூடை சிரிப்பு வராது. "அரிக்கன் லைட் நம் நாட்டினரதா"? என்று கேட்கலாமா; என்று பார்த்தேன். ஆனால் கேட்டால் கலவரம் ஏற்படுமல்லவா? கூட்டத்தில் கலவரம் ஏற்படும்படியான சந்தேகங்களோ கேள்விக்களோ கேட்கப்படுவது அழகல்லவாதலால் பேசாமல் இருந்துவிட்டேன். கேட்டிருந்தால் என்கைதான் மெஜாரிட்டி, அது உண்மை.

எனக்கு எவ்வளவோ நண்பர்கள் உண்டு. அவர்களில் அத்தியந்த நண்பர் ஒருவர் உண்டு. இந நண்பருக்கு என்னுடைய நட்பு மிகவும் பிரியந்தான். ஆனால் நான் 'குடி அரசு' வாசிப்பதுதான் அவருக்குப் பிடிப்பதில்லை. ஒரு நாள் 'குடி அரசில்' 'கற்பத்தடை' கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தேன். கேட்டுக்கொண்டே இருந்தவர் கடைசியில் அவருக்குத் தாங்க முடியவில்லை. கோபம் மீறிவிட்டது. அசைக்க முடியாத ஒரு கேள்வி கேட்டார். ஆண்குறி இருப்பதினால்தானே இந்த ஆராய்ச்சிகளெல்லாம், எப்படிக் கற்பத்தடை செய்யலாம்? எப்பொழுது செய்யலாம்? எவ்வாறு செய்யலாம்? என்ற ஆராய்ச்சிகளெல்லாம் எதற்கு? என் இவ்வளவு கஷ்டம் ஆகையால் அதை அறுத்து விடுங்கள். பிறகு அந்தக் கவலையே கிடையாது. என்றார். பேஷ்! முரட்டுக் கேள்வி தான்!! நமக்கு மூக்கு இருக்கிறது. அதனால் நமக்கு நல்ல வாசனையும், துர் வாசனையும் கிடைக்கிறது. துர் நாற்ற உணர்ச்சி நமக்கு எற்படும் போது சற்றேனும் நல்ல காற்று வீசும் பக்கத்திற்கு திரும்பிக் கொள்வீரா? அல்லது மூக்கினால்தானே கெட்ட வாசனை கிடைக்கிறதென்று நறுக்கென்று மூக்கை அறுத்து விடுவீரா?? நமக்கு மூக்கும் வேண்டும். நல்ல வாசனையும் வேண்டும், ஆனால் அதனால் உணரப்படும் கெட்ட வாசனை உதவாது. என்பது போலவேதான், நீங்கள் கேட்ட கேள்விக்கும், சந்தேகத்திற்கும் விடை, என்று சொல்லி வெடித்து விட்டுத்தான் மூச்சு விட்டேன். முதலில் சிரித்தவர்கள் சிரிப்பெல்லாம், பிறகு அவரவர்களுடைய அடிவயிற்றுக்குப் போய் விட்டன.

பண நெருக்கடியான இக்காலத்தில், பாமர மக்கள் இருக்கவசதியுள்ள இடமின்றி, வயிறுற உண்ண உணவின்றி தவிக்குமிக் காலத்தில், ஒரு ஊரில் ஒரு கோவில் புதிதாகவே கட்டப்பட்டு வருகிறது. அச்செலவுக்கு வேண்டிய பணம் யாருடையது என் பீர்களோ! பொது ஜனங்களிடம் உண்டியல் குலுக்கியே பல வருஷங்களாக சேர்க்கப் பட்ட பெருந் தொகை!! ஒரு சமயம் அக்கட்டிடம் கட்டுவதற்கு முக்கியஸ்தர்களில் ஒரு குட்டி கர்த்தாவைச்சந்தித்துப் பேச நேர்ந்தது. எத்தனை ஏழை மக்கள் இருக்க இடமின்றி கஷ்டப்படுகிறார்கள்? நடமாடும், கஷ்டப்படும் பண உதவியின்றி தவிக்கும் பாமர மக்கள் உக்கள் கண்களில் அகப்படவில்லையா? உங்களுடைய இரக்கத்தை அவர்கள் விஷயங்களில் காட்டக்கூடாதா? எந்தச் சாமி, கடவுள், சிவன் பெருமாள் உங்களிடம் வந்து வீடு இல்லை என்று அழுதது? அழுகும் பாமர மக்களிடம் உங்களுடைய கருணை, இரக்கம் செல்லட்டுமே? ஒரு வைத்திய சாலையைக் கட்டுங்கள், ஒரு பள்ளிக்கூடம் பாமர மக்களுக்கென நல்ல திட்டத்தில் ஏற்படுத்துங்கள், தொழிலாளிகள் பிழைக்க சுகமடைய வழியுண்டு என்றேன். அதற்கு அவர், என் கோவில் கட்டுவதினால் எவ்வளவு ஏழைகள் பிழைக்கிறார்கள்! கட்டி முடிகிறவரை எவ்வளவு தொழிலாளிகள்-நித்ய வாழ்வு செய்பவர்கள் பிழைக்கிறார்கள் அது உங்களுக்குத்தெரியவில்லையா? என்றார்.

ஐயா, வைத்தியசாலை பள்ளிக்கூடம், சாலைவசதியிவைகளைகட்ட ஆரம்பித்தீர்களானால் தொழிலாளிகள் பிழைப்பார்கள். கட்டிமுடிந்தவுடனும் பொது ஜனங்களுக்கும், நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும், நன்மையுண்டு கோவில்கட்டி முடிந்தபிறகும் யாவருக்கும் ஒருவிதமான பிரயோஜனமோ, சௌகரியமோ கிடையாதே! வேண்டுமானால் அக் கோவிலின் அர்ச்சகரும் அவர்மனைவியுமாகிய இரண்டொருவர் சுகமடைவார்களே ஒழிய பின் உபயோகம் கிடையாது. பொது நலத்திற்கு வழி ஏது? பணம்சேகரிக்க கஷ்டப்பட்ட நீங்கள் கூட உள்ளே போகப் படாதே! தப்பித்தவறி உள்ளே போய்விட்டீர்களானால் 'சூத்திரன்' வந்ததினால் தோஷப்பட்டுவிட்டது நீட்டைப்போக்கவேண்டும் என்று நீட்டு போக்கும் செலவு வசூலித்து விடுவார்களே! என்றேன். அதற்கு அவர் என்ன செய்கிறது ஆரம்பித்தாய்விட்டது. ஆனால் அதிருக்கட்டும் நீங்கள் குடி அரசு பிரியரோ என்றார். ஓகே-! என்ன!! என்ன!!! நான் பாட்டிற்கு வெடித்துக்கொண்டேயிருந்தேனால் குடி அரசுதாளங்களெல்லாம் புகையாய் போய்விடும். வாலிபனும் கண்டிப்பாய் என்னை வெடிப்பதற்கு மறுதரம் உத்தரவு யிடான். ஒன்றே! ஒன்று! அதையும் சொல்லிவிடுகிறேன் மேல்கண்ட உண்மைகள் நடந்த ஊரையும், பெயரையும் 'குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்' என்ற பழமொழி உள்ளவரை நான் சொல்லவேமாட்டேன். அடுத்தபடியாக வெடிக்கும் தினத்தையும் நான் சொல்லமாட்டேன். கடைசி வந்தனம் பிறகு பார்த்துக் கொள்ளுவோம்.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.
2½ X 5 கீ. கம்பிக்கரைபட்டு ரூ. 1-8
ஷேகுண்டஞ்சகரைடஜன் 1க்கு 15-0
No. 2 டஜன் 1க்கு 12-0
3 X 8 கீ. பட்டு கேஷ்டி 1க்கு 3-8
S. K. R வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,

இவற்றைப்பாருங்கள்.

(பைத்தியம் கிழித்தது.)

தொழிலாளர்.

இங்கிலாந்தில் உள்ள கிழக்கிந்திய சங்கத்தின் கூட்டம் ஒன்றில், இந்தியத் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றிப் பலர் பேசினார்கள். அப்பொழுது சர். உமார் ஹயத்கான் என்பவர் "தொழிலாளர்களின் கடன் சுமையை நீக்குவதற்கான சட்டங்கள் சமீபத்தில் ஏற்படும் என்று தோன்றவில்லை. ஏனெனில் வட்டிச்சுக் கொடுந்தும் பணக்காரர்களும், அவர்களுடைய நகூபர்களுந்தான் சட்ட சபைகளிலும், காங்கிரசிலும், மற்றுமுள்ள ஸ்தாபனங்களிலும் நிலைநிற்கின்றனர்." என்று கூறியிருக்கின்றார். ஆம் இவர் கூற்றில் என்ன சந்தேகம்? உண்மையில் நமது நாட்டுத் தொழிலாளர்களின் துன்பத்தைக் காங்கிரஸ் காரர்களாவது மற்ற எந்தக் கட்சியினர்களாவது தான் கவனிக்கின்றார்களா? நமது நாட்டின் "35" கோடி மக்களுக்கும் நான் தான் பிரதிநிதி "என்று சொல்லிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் இது வரையிலும் தொழிலாளர்களுக்காக என்ன செய்தது? ஒன்றும் செய்ய வில்லையே. ஆகையால் தொழிலாளர் மற்ற பணக்காரர்களையோ, கட்சிக் காரர்களையோ நம்பாமல் தங்கள் கையைத் தாங்களேபலப் படுத்திக் கொண்டால் தான் முன்னேற்றமடைய முடியும் என்று நாம் கூறுகிறோம்.

சட்ட மறுப்பு இயக்கம்.

சென்ற 10—3—32-ல் சென்னைச் சட்டசபையில் "பப்ளிக் சர்விஸ் கமிஷனின்" 1930-1931 ஆம் வருஷ அறிக்கையைப் பற்றி ஒரு ருசிகரமான விவாதம் நடந்தது. அச்சமயத்தில் சிலர், உத்தியோகம் விரும்பும் பட்டதாரிகளுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கக் கூடாதென்றும், ஆகையால் பரீக்ஷை வைத்து உத்தியோகஸ்தர்களைப் பொறுக்கியெடுக்கும் முறையை நீக்க வேண்டுமென்றும் பேசினார்கள். ஆனால் திரு. பார்த்தசாரதி அய்யங்கார் என்பவர் அப்பொழுது பேசிய வார்த்தைகள் கவனிக்கத் தக்கதாகும். "சட்ட மறுப்பு இயக்கம் பலமடைவதற்கு வேலையில்லாத் திண்டாட்டமே காரணம்" மென்றும், "வகுப்புவாரி உத்தியோகம் கொடுக்கும் முறையில் இம்மாகாணத்தில் வகுப்புத் துவேஷம் அதிகமாகி விட்டது" என்றும் பேசினார். திரு; அய்யங்கார் சொற்களில் உள்ள உண்மையைக் கவனிக்கவேண்டுகிறோம். பார்ப்பனர்களே ஏகபோகமாக அனுபவித்து வந்த உத்தியோக சொத்தில் மற்ற வகுப்பினர்களும் பங்கு கேட்க ஆரம்பித்ததுவகுப்புத்துவேஷம். அதாவதுபார்ப்பனர்களைப் போலவே பார்ப்பனரல்லாதாரும், உத்தியோகப் பதவிகளில் இருக்க வேண்டுமென்று கேட்பதுவகுப்புத்துவேஷம் என்பது தான் பார்ப்பனர்கள் சொல்லும் "வகுப்புத்துவேஷம்" என்னும் வார்த்தைக்கு அர்த்தமாக இருக்கிறது.

பார்ப்பனரல்லாதாரும் உத்தியோகங்களைப் பெற முயற்சிக்கும் காரணத்தால், பார்ப்பனர்களுக்கு முன் போல் இப்பொழுது தாராளமாக உத்தியோகம்கிடைப்பதில்லை, ஆகையால் அவர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் கலந்து கொண்டு பார்ப்பனர்லாதாரைப் பலியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் வகுப்புவாரி உத்தியோக முறையை எடுத்து விட்டுத் தாராளமாக முன் போல எல்லா உத்தியோகங்களையும் பார்ப்பனர்களுக்கே கொடுத்து வந்தால் சட்ட மறுப்பு இயக்கம் அடங்கி விடும் என்பதே நமது நாட்டு அரசியல் பார்ப்பனர்களின் கருத்து என்பதை அறியலாம். எப்படியாவது தங்களுடைய காரியத்தைப் பார்த்துக் கொள்ளுவதுதான் பார்ப்பனர்களின் தேசியம் என்பதை இன்னும் நமது சோணகிரிகள் உணராமலிருக்கின்றனவே! அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!!

பட்டதாரிகள்! பரிதாபம்!

மாஜி முதன் மந்திரி, டாக்டர் சுப்பராயன் அவர்கள் "பப்ளிக் சர்விஸ் கமிஷன்" அறிக்கையைப் பற்றி விவாதத்தின் போது, பட்டதாரிகளுக்குப் பரீக்ஷை வைத்து உத்தியோகத்திற்குப் பொறுக்குவது கூடாது என்று கண்டித்தவர்களுக்கும், வகுப்புவாரி உத்தியோகத்தினால் வகுப்புத்துவேஷம் வளருகிறது என்று சொல்லியவர்களுக்கும் சரியான சாட்டை கொடுத்தார்.

"வகுப்புவாரியாக உத்தியோகம்கொடுப்பது வகுப்புத் துவேஷத்தை அதிகப்படித்தி விட்டது என்று இன்று திரு. பார்த்தசாரதி அய்யங்கார் கூறுவதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. அரசியல் சம்பந்தமான சமாதானமற்ற பல விஷயங்களையும் நியாயமாகத்தீர்த்து வைக்கக் கூடியது வகுப்பு வாரி உத்தியோக முறையேயாகும்." என்று டாக்டர் சுப்பராயன் கூறிய வீர கர்ஜனையை நாம்பாராடுகிறோம்.

"பப்ளிக்சர்விஸ் கமிஷன்வைக்கும் பரீக்ஷையைப்பற்றிக்கூறும்போது,

"உத்தியோகத்திற்கு முன் வரும் அபேட்சகரின் பொது அறிவைப் பரிசோதிக்க வேண்டியது அவசியமே யாகும். சமீபத்தில் ஷி கமிஷன் பரீக்ஷைக்கு ஆஜரான ஓர் பட்டதாரியை பக்கிங்காம் கால்வாய் எங்கேயிருக்கிறதென்று கேட்டதற்கு அவர் லண்டனில் உள்ள பக்கிங்காம் அரண்மனையைச் சுற்றிப் போகும் கால்வாய்க்கு, பக்கிங்காம் கால்வாய் என்று பெயர் எனவிடைகூறினர். ஆகையால் உத்தியோகத்திற்கு வருபவர்களுக்குப்பொது அறிவு இருக்க வேண்டியது அவசியமாகும்" என்று பேசினர்.

அந்தோ பரிதாபம் நமது நாட்டுப் பட்டதாரிகளின் நிலைமையே இப்படியிருக்கும்போது சாதாரண மக்களின் நிலைமை எப்படியிருக்கும் என்று யோசனை செய்துபாருங்கள். இவர்களுக்குத்தான் உடனே பூரண சுயேச்சை வேண்டுமாம்!

எது அடிமைப்புத்தி?

அலகாபாத் சர்வகலாசாலையில்வைஸ்சான்ஸ்லராக இருக்கும் டாக்டர் கங்காநாத் என்பவர் பிரயாகை, பெண்கள் மணில வித்தியாலயத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர் நமது நாட்டுப்பெண்கள் முன் பின் ஆலோசியாமல் மேல் நாட்டுப்பெண்களின் பழக்க வழக்கங்களைப்பின்பற்றுதல் அடிமைப்புத்தியாகும் என்னும் கருத்துப்படப்பேசினர். அப்பொழுது அவர் அடிமைப்புத்திக்கு ஒரு உதாரணம் கூறினர். அவ்வுதாரணம் வருமாறு:—

"ஒரு சிறு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். இன்னும் கூந்தலே பெண்களின் அழகிற்குமுதன்மையானது என்று நம்பப்பட்டுவருகிறது. சமீப காலத்தில்தான் மேல்நாட்டுப் பெண்கள் தமது தலைமயிரை நறுக்கிக்கொள்ளத்தொடங்கினார்கள். இதைக்கண்டு நமது நாட்டுப்பெண்களும் தங்கள் கூந்தலை நறுக்கிவிட்டுக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். இவ்வாறு செய்வது நல்லதா? கெட்டதா? என்று இவர்கள் ஒரு விநாடி நேரங்கூட ஆலோசிக்கவில்லை. ஐரோப்பியப்பெண்களும், அமெரிக்கப்பெண்களும் இவ்வாறு நடந்து கொண்டிருப்பதால் இவர்களும் இதைப்பின்பற்றுகிறார்கள்' என்று பேசியிருக்கின்றார்.

நமது டாக்டரின் அறிவை நாம் மிகவும் மெச்சுகிறோம். 'பெண்களுக்குத்தலைமயிரில்தான் அழகு இருக்கிறது' என்று நம்புவது ஒருபழமையான நம்பிக்கையான அடிமைப்புத்தியல்லவா? ஒரு பெண் தனது நீண்ட கூந்தலை சிக்கல் பிடிக்காமலும், பேன் பிடிக்காமலும் நாற்றம் உண்டாகாமலும் வைத்துக்கொள்ள ஒரு நாளைக்கு எவ்வளவு நேரத்தைச்செலவழிக்க வேண்டியிருக்கிறது.? பல மணி நேரங்கள் அற்பமான மயிருக்குச்செலவழிப்பது இக்காலத்தில் அறிவுடைமையா? என்று நமது டாக்டர் யோசிக்கவில்லையே. ஆகவே 'கிராப்' செய்துகொள்ளும் பெண்கள் தங்கள் சௌகரியத்தை உத்தேசித்துச்செய்து கொள்ளுகிறார்களேயொழிய அடிமைப்புத்தியினால் அல்ல என்பதையும் நமது நாகரீகம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் மாற்றக்கூடாது என்பதுதான் அடிமைப்புத்தி என்பதையும், அறியாததற்காக வருந்துகிறோம்.

எலக்ஷனுக்குப் புதுவழி.

(வழிப்போக்கன்.)

பார்ப்பனர்கள் செய்கின்ற எந்தக் காரியமும் தங்கள் நன்மைக்காகவே இருக்கும் என்பதை நாம் கூறத் தேவையில்லை. அதிலும் அரசியல் பார்ப்பனர்களாக இருக்கிறவர்கள் செய்யும் காரியங்களெல்லாம் உத்தியோகத்திற்காகவும், எலக்ஷன்களில் வெற்றி பெறுவதற்காகவும் பாமர மக்களை ஏமாற்றச்செய்யப்படும், காரியங்கள் என்பது சுயமரியாதைக்காரர்களுக்குத்தெரியாத விஷயமல்ல. பார்ப்பனர்கள் இதுவரையிலும் காங்கிரஸ் பெயரைச்சொல்லித் தேசாபிமானிகளாக நடித்துப் பாமரமக்களை ஏமாற்றி வந்தார்கள். இப்பொழுதும் அந்தக்காரியத்தை அவர்களால் சுலபத்தில் செய்யமுடியவில்லை. ஏனென்றால் காங்கிரசைப் பற்றியோ, சட்டமறுப்பைப்பற்றியோ பேசினால் சிறையும், அபராதமும் வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகையால் பணக்காரப் பார்ப்பனர்கள் காங்கிரஸ் பெயரைச்சொல்லி ஏமாற்றமுடியவில்லை. ஆனால் எந்தவகையிலாவது தாங்கள் தேசபக்தர்களாக விளங்கினால்தான் ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப்பெற முடியும் என்ற விஷயம் அவர்களுக்குத்தெரியும். ஆகையால் இப்பொழுது தங்கள் தேசாபிமானப்பட்டம் போகாமலிருப்பதற்குப் புதுவழியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பார்ப்பனர்கள் எலக்ஷனுக்குக் கண்டுபிடித்திருக்கும் அந்தப்புதுவழி 'சுதேசிப்பிரசாரம்' என்பதேயாகும இந்தப்பெயரினால் ஏமாற்ற 'சுதேசிப் பிரசாரசங்கம்' என இப்பொழுது நமது நாட்டில் பலவிடங்களிலும் ஸ்தாபிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறவர்களையும், இதை ஸ்தாபிக்க முயலுகிறவர்களையும், இதற்கு தலைவர்களாக வருகிறவர்களையும் பார்த்தால் உண்மை விளங்கும். அரசாங்கத்தார் காங்கிரஸ் கலகத்தை அடக்காமல் விட்டுக் கொண்டிருந்த காலத்தில், பிரமாதமாகக் காங்கிரசின் செய்கைகளைப் புகழ்ந்து பேசியவர்கள் தான் இன்று சுதேசிப் பிரசார சங்கத்தார்களாகத் தோன்றியிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுகிறோம். அல்லாமலும் தேசியத்தின் பெயரால் பதவி பெற விரும்பும் சில பார்ப்பனரல்லாதாரும் இந்தச் சங்கங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதையும் அறிய வேண்டும். ஆகையால் இப்பொழுது ஏற்பட்டு வரும் சுதேசிப் பிரசார சங்கங்கள் "உண்மையில் சுதேசிப் பண்டங்களைப் பற்றிப் பிரசாரம் பண்ண அல்ல வென்பதையும், இனி வரப்போகும் எலக்ஷன்களில் தாங்கள் வெற்றி பெறுவதற்காகப் பதவி வேட்டைக்காரர்களால் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரசாரம் என்பதையும் உணர்ந்து ஜாக்கிரதையாயிருக்க வேண்டுகிறோம்.

[5- ம்பக்கத்தொடர்ச்சி]

திலும் ஜாதியார்கள் செல்வாக்கைப் பெற்றிருந்ததை ரிக்வேத சம்ஹிதைகளில் (Samhitas) காணலாம். ஒரு சம்ஹிதையில் யானை மேல் பொன்னைக்கொண்டுபோக வேதியன் பெற்றான் எனவும் கூறியுள்ளது. மற்ற ஜாதியாரும் அடுத்தாற்போல் செல்வத்தைப்பெற்றுஇருத்தலால் அந்தந்த வர்ணத்தார் பொருள் படைத்துள்ள ஜாதிப்பதவிகளைப் பெற்றுள்ளார். கடையில் நின்ற சூத்திரன் பொருளற்றவனுதலால் கஷ்டவேலை செய்து பிழைக்க நேரிட்டது; இவனுக்கும் கடையாயுள்ள பஞ்சமனே (ஐந்தாம் ஜாதியான்) எந்த பொருளும் இல்லாத தோஷத்தால் கிராமத்திற்கு அப்புறம் கிடத்தப்பட்டிருப்பது. இதுதான் தாழ்த்தப்பட்டோர் என்று வழங்கும் 6 கோடி மக்கள் உண்டாகிய காரணம். "இல்லாதவன், பொல்லாதவன்' என்றதோர் பழமொழியுண்டு. அதற்கிணங்கவே செல்வம் படைத்தோர்கள் பஞ்சமனேசண்டாளனென்றும், பரையனென்றும் வழங்கிவருவதென அறிக. ஆதலின் தீண்டாமை, பொருள் இல்லாமையாகிய துர் அதிர்ஷ்டத்தால் வந்தவினையே யொழிய பிறப்பாலோ அல்லது கர்ப்பத்தாலோ வந்த வினை அல்ல. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ளபடி' என்று வழங்குவதும் இந்த பொருளாதார வேற்றுமையாலென அறிக. யார் பெரியோர்? இட்டார். யார் இடுவார்? பொருள் படைத்தோர் உயர்குலத்தோரும், இடசக்தியற்றோர் இழி குலத்தோர் என்று பெறப்பட்டது!!! இந்தப் பொருளாதாரக் குறைவே, நமது ஜாதி வேற்றுமைக்கும் நமது தீண்டாமைக்கும், நமது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், நமது விலக்கப் பட்டவர்களுக்கும் காரணமாகும், இந்த சந்தர்ப்பத்தில், "பணம் பந்தியிலும், குணம் குப்பையிலும்" என்று வழங்கி வருவதையும கவனித்தல் வேண்டும். ஆதலின், ஜாதி ஒழிய வேண்டுமாயின், பொருளாதார சமத்துவம் ஏற்படவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தீண்டாதவனைத்தீண்டிக் கொள்வதால், தீண்டாமை யொழியுமென்பது மோசடி வழக்கென்றே கருதல் வேண்டும். தீண்டாதானுடைய தரித்திரம் ஒழிந்த மாத்திரத்தில் அதாவது தீண்டாதானுக்கும், தீண்டப்படும் ஜாதியாறுக்குமுள்ள பொருளாதார வித்தியாசம் போனமாத்திரத்தில் தீண்டாமை அன்றே பொழிந்துபோகும். இதற்கு நிருஷ்டாந்தம் வேண்டுமாயின் கவர்னருடன் விருந்துண்ணும் உயர் குல ஜாதியார் கவர்னருக்கு சமைத்துப் போடும்பட்லருடன் (Butler) உண்ணுவார்களா? வருணாச்சிரமதருமமும் பொருள் நட்பிலேயே ஆதாரம் கொண்டுள்ளது, எந்த ஒருமத வருணாச்சிரம தருமத்தைத்தழுவுகின்றான்? பணத்திற்கு முன் ஜாதி என்ன செய்யும்? பணம் படைத்த அரிச்சந்திரன் அரசனுனான்! பணமிழந்த அரிச்சந்திரன் வெட்டியானுன்!! கார்யாம்சத்தில் ஜாதி, வேற்றுமை பொருளேப்பொருந்தி நிற்கின்றது. இந்நிலைமை மாற்றுவதெழிய நமது ஜாதி இந்தியாவைவிட்டு நீங்குவது கஷ்டம்.

ஜப்பான் தேசத்தில் ஓர்வித தீண்டாதார் இருந்து வந்தார்கள். அவர்கள் பெயர் அயினே (Aino) அவர்களும் நமது நாட்டு தீண்டாதாரைநடத்துவதுபோல் நடத்தப்பட்டு வந்தார்கள். அந்நாட்டில் சாமுரை (Samurai) என்ற உயர்குலத்தோர் நமது நாட்டு பிராமணரைப்போல் அவ்வூர்தீண்டாதாரை நடத்தி வந்தனர். 60 வருஷத்திற்கு முந்தி ஜப்பானியருக்கு ஓர் புது உணர்ச்சி வந்ததை முன்னிட்டு சாமுரே அனைவரும் தங்கள் தன்னல வாழ்வை (Exclusivenes) விட்டு அயினேக்களை தங்கள் சமூகவாழ்க்கையில் சகல சமத்துவத்துடன் வாழ்ந்து வர அவர்களுடைய பொருளாதாரத்தாழ்வை நீக்கவேண்டிய வசதிகளைவுண்டு பண்ணியதின் காரணமாக இன்று, ஜபான் தேசம் வல்லரசுகளில் வொன்றுக மதிக்கப்பட்டு வருகிறது.

ஆங்கில நாட்டிலும், ஆங்கில பிரபுக்கள் தங்கள் தேச சாமான்ய ஜனங்களை, பண்டைக் காலத்தில், ஓர் விதமான தீண்டாதாரைப்போல் நடத்திவந்தார்கள். ஆனால், சில நூற்றாண்டுகளாக செல்வக்கிளர்ச்சியால், பல துரைகளிலும் விலக்கப்பட்டிருந்த சாமான்ய ஜனங்கள் சற்று பொருளாதாரப் பெருக்கைப் பெறவும், ஆங்கில தீண்டாமை யொழிந்து சாமான்ய மக்கள், ஏறக்குறைய பல சமத்துவங்களை அனுபவிக்க இடம் கொடுத்தது.

பிரஞ்சு தேசத்திலும், மற்ற உலக மூழுமையுமே, பொருளாதார விடுதலையால், பாமர மக்கள் சிற்சில சுதந்திரங்களைப் பெற நேர்ந்தது. மனித குலம் சுகமுடன் வாழவேண்டுமானால், பலகோடி பல்லாயிர பாமர மக்களின் பொருளாதார தாழ்வு நீங்கி யாவருக்கும் பொருளாதார சமத்துவம் வரவேண்டுமென அறிக. எண் சாண் உடம்பிற்கு வயிறே பிரதானம். சில வகுப்பார், தங்கள் வயிறை மாத்திரம் நிரப்ப ஜாதி மத, அரசியல் சூட்சிகளை கற்பித்துக் கொண்டு, பாமர மக்களை எமாற்றி வந்திருத்கின்றனர், இந்த சூட்சியைத் தெள்ளத் தெளியக்காட்டி பாமர மக்களின் அறியாமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும், பொருளாதார தாழ்மையையும் நீங்கும்படி செய்வது நமதுசுய மரியாதையோருடைய முக்கிய கடமையாகும். நமது நாட்டில் வாழும் 35 கோடி மக்களும், ஆண், பெண், குழந்தைகள் அடங்கலாக உண்மை சமத்துவமும், உண்மை சுதந்தரமும், பெறவேண்டுமாயின், போது ஜன சுயராஜ்யம் நிலைக்கப் பாடுபடவேண்டும். இந்த சுயராஜ்யத்தில் போது மக்களின் வறுமையும், தரித்திரமும் முதலில்வொழியுமாறு சமூக திட்டங்கள் செய்யவேண்டும். மக்கள்கற்பனைகளும் ஜாதி வேற்றுமைகளும் இந்திய சமூக வாழ்விலிருந்து பற்றறவே யொழித்தல் வேண்டும். இந்தியாவில் ஒடுக்கப்பட்டவர்களென்றுவது தாழ்த்தப்பட்டவர்களென்றுவது, தீண்டாதாரென்றுவது, நாமதேயமே இல்லாமற்போகவேண்டும். பொருளாதார வேற்றுமையும் ஜாதி வேற்றுமையும் மத வேற்றுமையும் இல்லாதவாழ்வே மனித வாழ்வென உணர்ந்து அவ்வித வாழ்வை நமது இந்திய நாடு அடையுமாறு உழைப்போமாக.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

தாரிகளும் இதில்கலந்திருக்கிறார்களா? அல்லது கலந்து கொள்ளுவார்களா? என்பது தான். ஏனென்றால் பார்ப்பனர்கள் ஏர்பிடித்து உழக்கூடாது என்று மநுதர்மம் கூறுகிறது. ஆகையால்தான் பார்ப்பனர்கள் மிராசுதாரர்களாயிருந்தாலும், ஜமீன்தாரர் களாயிருந்தாலும், பண்ணைக்காரர்களாயிருந்தாலும், இன்னும்சொந்தக் கையினால் ஏர்பிடித்து உழமுன்வரவில்லை.

ஆனால், "பார்ப்பனர்கள் பலகாரமும்சோறும்விற்பது பாவம்" என்ற சட்டத்தை மீறிவிட்டார்கள். ஹோட்டல்கள் வைத்து நடத்துகிறார்கள். "பார்ப்பனர்கள்கப்பலேறக்கூடாது" என்றுஇருக்கும் கட்டத்தையும் மீறிவிட்டார்கள். "பார்ப்பனர்கள் வேதங்கள் ஓதவேண்டும் எக்கியங்கள்செய்யவேண்டும்" என்றசட்டத்தையும் மீறிவிட்டார்கள். பார்ப்பனர்கள்உச்சிக்குடுமிவைக்கவேண்டும் என்றசட்டத்தையும் மீறிவிட்டார்கள் ஆகவே பார்ப்பனர்கள் இப்பொழுது செய்யாதவேலையில்லை என்று சொல்லலாம். உழவுத்தொழில்- அதாவது கலப்பையைக் கையால் பிடித்துஉழுகின்றதொழில் ஒன்றைத்தான் இன்னும் அவர்கள் வெளிப்படையாகச் செய்யவில்லை. இனிஇத் தொழிலையும்செய்ய முன்வருவார்கள் என்றே எதிர்பார்க்கின்றோம்.

ஆனால் ஒருவிஷயத்தை ஞாபகப்படுத்துகின்றோம். யாருக்கு? அந்தப் பார்ப்பனசமூகத்தாருக்கு. நீங்களும் அவர்களிடம் கண்டபோதெல்லாம் சொல்லுங்கள்! "ஐயா! நீங்களே! எல்லாச்சாஸ்திரக்கட்டளைகளையும் மீறிவிட்டீர்களே. உங்களிடத்திலேயே சாஸ்திரம் மதம் முதலிய வைகள் இல்லையே. அப்படியிருக்க என்வீணுகஎன்னுரருக்கு உபதேசம் பண்ணுகிறீர்கள்? மதமென்றும், சாஸ்திரமென்றும் அபிமானம் பாராட்டுகிறீர்கள், நடத்தையில் கைகொள்ளமுடியாத காரியத்தின்மேல் அபிமானம்மாத்திரம்வைப்பதால் என்ன பயன்? ஆகையால் நீங்களும் வெளிப்படையாக மதத்தை அழிக்கவேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். ஜாதித்துவேஷப் பாராட்டுவதைவிட்டுவிடுங்கள். இந்தியர்கள் எல்லோரையும் சகோதரர்களாகப் பாவிக்கமுன் வாருங்கள்! இன்றைக்கே நமதுதுன்பம்ஒழியும் என்று சொல்லுங்கள். கடைசியாக நமது வந்தனத்தைத் தெரிவிக்காமலிருப்பது தவறு. இந்தமாதிரியான மாறுதலை உண்டாக்கிய தரித்திர ராஜனுக்கு வந்தனம் செய்கிறோம். வேலையில்லாத்திண்டாட்டமும், தரித்திரமும் தான் இறுதியில் சமதர்மத்தை உண்டாக்குமென்பது நமது நம்பிக்கை. "துன்புளது எனின் அன்றே சுகம்உளது" என்றார் ஒருபெரியபுலவர். சாதாரணமாக "கலகம் பிறந்தால்நியாயம் பிறக்கும்" என்று சொல்லுவார்கள். ஆகையால் வேலையில்லாத் திண்டாட்டமும், தரித்திரமும் நமதுநன்மைக்கே யாகும்.வந்தனம்.பிறகுசந்திக்கிறோம்.

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.
இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.
நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

22 ஆண்டுகளாக அனுபவமுள்ள உயர்தரமான மருந்து.

ரிஜிஸ்டர் செய்த ஆறுமுக முத்திரையுள்ளது.

13. "கெய்ரோடைன்" (Regd.)

(ரிஜிஸ்டர் செய்தது)

பத்தியம் கிடையாது! கெடுதல் செய்யாது!!

இது இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும், தாது பலத்திற்கும் அதிசயமான டானிக் மருந்து. நாள்பட்ட வெள்ளை, நெடுநாள் மூலச்சூடு, வெட்டை, மேக வியாதி, துர்நீர் வியாதிகள், உஷ்ண வியாதிகளைத் தும்பி, வராமல் குணப்படுத்தும். தேகக்குளிர்ச்சியும், செழிப்பும், அழகும், பலமும் உண்டாக்கும். இந்த மருந்தில் கல்மதம் என்ற சிலாசத்துப் பஸ்பம், சந்தனம், அபச்சொந்தூரம், ரசம், கெந்தகம், நிமளை குருபஸ்பம் முதலிய அதிசயமான மருந்துகள் சேர்ந்திருக்கின்றன.

இந்த ஒரே மருந்திலல் தீரும் வியாதிகளாவன;—

நாள்பட்ட வெள்ளை
வெட்டை
சீழ் மேகம்
தந்தி மேகம்
சொப்பனஸ்கலிதம்
தேகமெலிவு
எலும்புருக்கி
இரத்தக்குறைவு
பலக்குறைவு
தேகவெளுப்பு
கைகால் அசதி
தாது நஷ்டம்
மூலச்சூடு
மூலவாய்வு
இரத்தமூலம்
மூலக்கடுப்பு
எரிச்சல்
மூலக்குத்தல்
வாய்ப்புண்
குடல்புண்
வயிற்றுப்புண்
நீர்த்தாரைப்புண்
நெஞ்சுப்புண்
மேகசூரம்
உஷ்ண இருமல்
ஈளை இருமல்
சுவாச காசம்
இழுப்பு, நிகைப்பு
குன்ம வயிற்றுவலி
வாய்வு
நெஞ்சுவலி
நெஞ்சு எரிவு
பசிக்குறைவு
உஷ்ண வயிற்றுவலி
சூதக வயிற்றுவலி
சூதகவாய்வு
சூதகக்கட்டி
கருப்பக்கிருமி
மலடு
சூதகவெள்ளை
காக்கை வலிப்பு
வெட்டை வாய்வு
இடுப்புவலி
முழங்கால் வாதம்
சூலைக்கட்டு
கால் குடைச்சல்
முகவாதம்
கண் எரிச்சல்
அந்திமாலை
கண் மங்கல்
காதில் சீழ்வடிதல்
பீனிசம்
புழுவெட்டு
பித்த வெடிப்பு
பித்த மயக்கம்
சிரங்கு
நமைச்சல்
பத்துகள்
கட்டிகள்
சிலந்திகள்
அரையாப்பு
கிரந்திப்புண்
துர்நீர்கள்
கண்டமாலை
கரப்பான் புண்கள்
வாதநீர்
பித்தநீர்
வாதம் 80
பித்தம் 40
ஐயம் 96
வாய்வு 10
குன்மம் 8 வலிப்பு 5

முதலிய வாத பித்த ஐய சம்பந்தமான சகல வியாதிகளையும் ஆச்சரியமாகக் குணப்படுத்தும். இதை வியாதி இல்லாதவர்களும் யாதொரு பத்தியமும் இல்லாமல் சாப்பிட்டு வந்தால் பலவீனமும் உடம்புத் தளர்ச்சியும் நீங்கி மெலிந்த தேகம் பருத்து இரத்த விருத்தியும் அழகும் பலமும் தாதுபுஷ்டியும் உண்டாகும். ஆண், பெண், குழந்தைகள் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை. இது மீன் எண்ணெய்யைவிட பத்து மடங்கு உயர்ந்தது. ஒரு புட்டி மருந்தில் உடம்பில் 5 முதல் 10 நாத்தல் நிறைவுள்ள சதைபுண்டாகும். தேக புஷ்டிக்கு நல்ல மருந்து. வைத்தியர்களும், டாக்டர்களும் வாங்கிப்பரீட்சை பார்க்கலாம். இது சாந்தமான மருந்து. எல்லா உடம்புக்கும் பொருத்தமானது. யாதொரு பத்தியமுமில்லாமல் சாப்பிடலாம். உடம்பிலுள்ள உஷ்ண வியாதி எல்லாம் தீரும்.

வெட்டைச் சூட்டினாலும், உஷ்ணத்தினாலும் மெலிந்து வாடி இருக்கிற பெண்கள் இதைச் சாப்பிட்டால் தேகச் செழிப்பும், முகக்களையும், அழகும் வசீகரமும், தேகபுஷ்டியும் உண்டாகும். தேகக் குளிர்ச்சிக்குக் கைகண்டது.

உடம்பு மெலிந்திருக்கிற வாலிபர்கள் இந்தக் கெய்ரோடைன் மருந்தை ஒருபுட்டி வாங்கிச் சாப்பிட்டால் உடம்பில் சதை புஷ்டி உண்டாகி நரம்புகளுக்குப் பலமும், தேகபுஷ்டியும், அழகும் உண்டாகும்.

மெலிந்து தளர்ந்திருக்கிற கிழவர்கள் இதை உண்டு வந்தால் தளர்ந்து போன ஜீரணக்கருவிகள் உறுதிபெற்று ஜீரண சக்தியும், ஆகாரமும் அதிகப்பட்டு உடம்புக்கு நல்ல பலமும் புதிய ஊக்கமும் உண்டாகும்.

இந்தக் கெய்ரோடைன் டானிக் மருந்தை எத்தனை தினமான நோயுள்ளவர்கள் சாப்பிட்டாலும், எந்தெந்த நோயினால் உடம்பு எவ்வளவு மெலிந்திருந்தாலும், நோய்களைத் தடுத்து நல்ல சுகத்தையும் பலத்தையும் தரும். பற்பல வியாதிகளையும் வராமல் தடுக்கும்.

தாதுபுஷ்டிக்கு ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் சாப்பிட்டாலும் என்றும் எதிர்பாராத வீரிய பலமும் உண்டாகும். இளங்குமரர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. "நிசமாக இம்மருந்தின் பெருமை கேளாய், அறமாதர் அணைந்திடினுஞ் செயல்கள் துஞ்சி ஆணவமில்லாததோர் அசதி நோய்க்குத், திறமாக மண்டலந்தான் பாதியுண்டால் ஜெகமாதர்அஞ்சமிகப் போக மீறும், குறமாதைச் சேர்ந்தோன் தன் ஆணை சொன்னேன் குவலயத்தில் விடர்களுக்கீ துரைத்திடாதே" என்று நூல் இருக்கிறது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வியாதி இருந்தாலும், இல்லாவிட்டாலும் இதைச் சாப்பிட்டால் உடம்பிலிருக்கிற சிவப்பு இரத்த உயிர் அணுக்கள் (Red Blood Cells) ஏராளமாக விருத்தியாகி, சுறுசுறுப்புண்டாகி, மேனி வளர்ந்து, புதிய பலமும், புதிய அழகும், புதிய ஊக்கமும், புதிய செழிப்பும் ஏற்பட்டு தேக ஆரோக்கியமும் இரத்த சுத்தியும் உண்டாகும். பூரணசுகத்திற்கு ஒரு புட்டி மருந்து போதுமானது.

மலாய் நாட்டார்கள் முன்பணம் அனுப்பவேண்டும்.

80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0. தபால் செலவு வேறு.

ஹெட் ஆபீஸ் விலாசம்:— ஆர். எஸ். பதி அன் கோ (ரிஜிஸ்டர்டு)
215, மேலை மாசி வீதி, மதுரை.

தந்தி விலாசம், "சித்தர்" மதுரை. } கிளை ஆபீஸ்:— ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோயில் மேலக்கோபுரம் உட்புறம், மதுரை.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சித்தாந்த சாரியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்புச் சத்தியாக்கிரகம்	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோகல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் தபாருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புவதைவிட புஸ்தக விலையத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களும் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:— "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா	$ 1.00.
வெளிநாடு ,, இந்தியா	$ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அரிப்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜலப்போட், சப்போ.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திராட்டுப்பால்"
நகைச்சுவை விருந்து சாவல்கள்
மெய்கூச்செறிந்திடும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிசை"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளிவருகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—4—0
தனிப்பிரதி	ரூ. 0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
திராவிடம் ...	ரூ. 10—0—0

மானேஜர்,
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.



Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

ஹிஸ் ஹைநெஸ் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் பட்டாபிஷேகக் கண்காட்சியிலும் கவர்ன்மெண்ட் மந்திரிகள் நலமைவகித்த சித்தவைத்திய மகாநாடு கண்காட்சிகளிலும் முதல்நம்பர் தங்கமெடல்களும், மெரிட் சர்ட்டிபிக்கட்டுகளும், பெற்றிருக்கிற உண்மையான ஆறுமுகமுத்திரையுள்ள மருந்துகள்.

மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன.

தாதுபுஷ்டிக்கு அதிசயமான டானிக் மருந்து.

கெய்ரோடைன்.

பத்தியம் கிடையாது. ரிஜிஸ்டர் செய்தது. ஆறுமுக முத்திரையுள்ளது. கெடுதல் செய்யாது. வியாதி இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண், பெண் யாவரும் யாதொரு பத்தியமும் இல்லாமல் சாப்பிடலாம்.

இந்த ஒரே மருந்தில் தீரும் வியாதிகள்.

3 நாளில் வயிறு மந்தம், புளித்தேப்பம், அஜீரணை வாய்வுகள், மந்தவாய்வுகள் குணமாகும்.
6 ,, இரத்த மூலம், மூலக்குத்தல், வேதனைகள், மூல வாய்வுகள் தீரும். அபான வாய்வுகள் நன்றாய் வெளியாகும்.
7 ,, மலச்சிக்கல், வாய்வுகள் நீக்கி எராளமான பசி உண்டாகும். பித்தவாய்வு நீங்கும். அதிக உணவு செல்லும்.
9 ,, வயிற்றுவலி, வாந்தி, பித்தம், மயக்கம், புளித்தேப்பம், எரிகுல்மம், நெஞ்சுவலி, வாய்வுக்குத்து மார் அடைப்பு தீரும்.
10 ,, இரத்தம் ஊறும், ஊக்கமும் சுறுசுறுப்பும், நாடி நரம்புகளுக்கு வலிமையும், தேக பலமும் தரும்.
15 ,, வீரிய விருத்தியும், எராளமான தாது புஷ்டியும் மீறி வரும். சொப்பனஸ்கலிதம் அசதிகள் தீரும்.
20 ,, இருமல், இழுப்பு, நெஞ்சில் கபம், மந்தாரகாசம், சுவாசகாசம், ஈளை காசம், க்ஷயம், சுரம், எலும்புருக்கி தீரும்.
25 ,, வாய்ப்புண், குடல்புண், நெஞ்சுப் புண்கள் ஆறும். கண்ணொளிச்சல் மூளைக்கோளாறு குணமாகும்.
30 ,, சூடு, நாள்பட்ட வெள்ளை, தந்திமேகம், முலச்சூடு, தேகக்காங்கை, மஞ்சள் மூத்திரம், உஷ்ணரோய்கள் தீரும்.
31 ,, சூதகவாய்வு, சூதக வயிற்றுவலி, சூதக்கட்டி, கருப்ப வெள்ளை, சூதக ஜன்னி, மலக்கிருமிகள் குணமாகும்.
32 ,, மெலிந்த தேகம் புஷ்டியாகும், உடம்பு நிறை அதிகப்படும், தாது கட்டும், இரத்தம் எராளமாக விருத்தியாகும்.
33 ,, தேகக்குளிர்ச்சி, செழிப்பும், முகத்தில் அழகும், வசீகரமும் உண்டாகும். கைகடுக்கம், தேகவெளுப்பு தீரும்.
34 ,, புண்கள், சொரி கரப்பான் வியாதிகள், சிரங்கு, அரிப்புகள், கிரந்தி, மேக நீர், தூர்நீர் வியாதிகள் நீங்கும்.
35 ,, மேகநீர், கண்மங்கல், கண் கூச்சம், சிவப்பு, வலிகள், மாலைக்கண், திமிரங்கல் குணமாகும்.
36 ,, குழந்தை பெற்றிருக்கிற தாய்மார்களுக்குப் பாலுண்டாகும். பலம் வரும். குழந்தைகளும் புஷ்டியாய் வளரும்.
37 ,, வயது மூத்த கிழவர்களுக்கு தடக்கவும், கலைப்பில்லாமல் வேலை செய்யவும் முடியும். சாப்பாடு நன்றாய்ச் செரிக்கும்.
38 ,, குளிர்சுரம், மலேரியாசுரம், யானைக்கால்சுரம், பிளேக்சுரம், விஷசுரங்களை அடிக்கடி வராமல்நிறுத்திவிடும்.
39 ,, நெடுநாளாக சமையாத பெண்கள் சாப்பிட்டால், இரத்த புஷ்டியுண்டாகி பருவமடைவார்கள்.
,, ,, மந்தாரகாசம், சுவாசகாசம், காக்கைவலிப்பு, மூர்ச்சை மயக்கம், வாதங்கள், ஜன்னிகளை வராமல் தடுத்துவிடும்.
40 ,, உடம்புமெலிந்து போவதினால் உண்டாகும் எலும்புருக்கி, க்ஷயரோகம், இருமல் வியாதியை வராமல் தடுக்கும்.

ஒரு மண்டலம் தொடர்ச்சியாகச் சாப்பிட்டால் பலவீனம், மலடுகள், ஆணவக்குறைவுகள் நீங்கும். வாதங்கள், வலிப்புகள், குன்மகட்டிகள், சுரக்கட்டிகள், ஆரம்பக்குஷ்டங்கள், மேகநீர், தூர்நீர் வியாதிகள், புண்புரைகள், பற்பலவியாதிகள் சேர்ந்த தொந்த வியாதிகளை எல்லாம் சமப்படுத்தி உடலுக்கு வலிமையும், ஆயுள்பலமும் தரும். இது ஒரு கல்பமருந்து.

பூரணசுகத்திற்கு ஒரேபுட்டி மருந்து போதுமானது 80 வேளைமருந்து புட்டி 1-க்கு விலை ரூ 5—0—0.

எமது "சித்தர் சஞ்சீவி மாத்திரையை" இரண்டு மூன்று நாளைக்குப் பேதிக்குச்சாப்பிட்டு அதன்பிறகு "கெய்ரோடைன்" டானிக் சாப்பிட்டால் சீக்கிரம் குணம் உண்டாகும், சித்தர் சஞ்சீவி மாத்திரை புட்டி 1-க்கு விலை அணா எட்டு. எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு வேறு. கேட்டலாக் இலவம். மலாய் நாட்டார்கள் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஹெட் ஆபீஸ் விலாசம்:—

ஆர். எஸ். பதி அன் கோ., (ரிஜிஸ்டர்டு.)
215 மேலமாசி வீதி, மதுரை

தந்தி விலாசம்:— "சித்தர்" மதுரை

கிளை ஆபீஸ்:—

ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோயில் மேலக்கோபுரம் உட்புறம், மதுரை.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.